பக்கங்கள்:-33

# காலை முரசு

## அம்பாந்தோட்டையில் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலை!



அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம – சந்துங்கம பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 11 | சனிக்கிழமை | 27.09.2025 | அதிர்வு 057

# இலங்கை அரசின் முற்போக்கான செயற்றிட்டத்தைப் பாராட்டிய ஐ.நா.

## முழு ஆதரவும் தெரிவிப்பு



ஐக்கியநாடுகள்சபையின்80ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அமெரிக்க நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி அநுரகுமாரவை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் 06





# எந்த அழுத்தத்துக்கும் அடிபணியவே மாட்டேன்

## அமெரிக்காவில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

நாட்டு மக்களின் அபிலாஷைகள் மற்றும் நம்பிக்கைகளுடன் மட்டுமே தான் கட்டுப்பட்டிருப்பதாகவும், தற்போதைய அரசு ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த அரசைத் தெரிவு செய்து மக்கள் வைத்துள்ள அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் எந்தவொரு அழுத்தத்துக்கும் அடிபணியத் தயாராக இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார் 07




தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று நல்லூரில் உள்ள பிரதான நினைவுத் தூபியில் நடைபெற்ற சமயம் அங்கு ஒரு சம்பவம் இடம்பெற்றது.

நினைவேந்தல் நிறைவடைந்தபோது அங்கு நின்ற ஒருவர் துண்டுப்பிரசுரம் ஒன்றின் பிரதிகளை அங்கிருந்தவர்கள் மத்தியில் விநியோகித்தார்.

அந்தத் துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தவரை வளைத்துப் பிடித்து, மோசமாகக் கையாண்டு அச்சுறுத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (சைக்கிள் கட்சி) ஆதரவாளர்கள், அவரைத் தாக்க முற்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

“நினைவேந்தலில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. இதில் நுழைந்துள்ள அரசியல் கட்சி வெளியேற வேண்டும்” என்ற கருத்தில் துண்டுப்பிரசுரங்களை அங்கு விநியோகித்த பொதுமகனுடனேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் முரண்பட்டுத் தர்க்கத்தில் ஈடுபட்டனர். 06

# காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு நன்மை பயக்காது!

## இப்படி சபையில் கூறினார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



"காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய அரசின் நிதி ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளும்போது காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது. இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்."

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு 2017.05.02 ஆம் திகதியன்று அமைச்சரவை தீர்மானத்துக்கமைய துறைமுக அதிகார சபைக்கு பொறுப்பாக்கப்பட்டது. இதற்கமைய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் இந்திய வங்கி ஊடாக முன்னெடுக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆலோசனை சேவை ஒப்பந்தத்துக்கு அமைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயலுமான வகையில் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு மதிப்பீட்டு நிதி 2021 ஆம் ஆண்டு மீளாய்வுடன் 45.27 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 61.5 மில்லியன் டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்துக்குரிய கடன் ஒப்பந்தத்துக்கு அமைய 75 சதவீதம் பண்டம் மற்றும் சேவைகள் இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் செலவு 2012 ஆம் ஆண்டு மேலதிக மதிப்பீட்டுடன் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய அரசின் நிதி ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை.

காங்கேசன்துறை துறைமுகத்தை அண்மித்த கடற்பகுதி 10 மீற்றர்- 12 மீற்றர் வரை ஆழ பரப்பைக் கொண்டுள்ளதுடன் அந்த ஆழத்தை மேலும் அதிகரிப்பதற்கு அதிக நிதியைச் செலவிட வேண்டும். இந்தத் துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது. இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்." – என்றார்.

# யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த ரயிலில் மோதி ஆண் ஒருவர் மரணம்!



ரயிலில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு – கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் பொலிஸ் பிரிவின் சிராவஸ்திபுர ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 57 வயதுடைய கண்டிப் பகுதியைவசிப்பிடமாககொண்டவர்என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒக்டோபரில் சீனா பறக்கிறார் பிரதமர்

பிரதமர் ஹரிணி அமரசூரிய உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு எதிர்வரும் ஒக்டோபரில் சீனா செல்லவுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றிய போதே பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசு மற்றும் இலங்கை மக்கள் சார்பில் சீனாவுக்கு அவர் வாழ்த்துக்களைக் கூறினார்.

”1949ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசை ஏற்றுக் கொண்ட பிரதான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அன்றிலிருந்து தொடரும் இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரத மர் ஹரிணி அமரசூரிய ஒக்டோபரில் பீஜிங்கிற்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்யவுள்ளார். அதேபோன்று சீனாவின் ‘ஒரு



சீன’ கொள்கையையும் எமது வெளிநாட்டுக் கொள்கையின் ஊடாக ஸ்திரமாக ஏற்றுக்கொள்கின்றோம்.” - என்று பொருளா தார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# அர்ஜூன மகேந்திரனுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு!

2015 ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறி விவகாரத் தில் அரசுக்குப் பத்து பில்லியன் ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிரா கத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ்.போதரகம நேரு வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபரை முந்தைய விசாரணை திகதியில் நீதிமன்றத்தில் முன்னி லையாகுமாறு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது என்று நீதிவான் நீதிமன் றத்துக்குத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான ஆதாரங்களை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

முறைப்பாடு தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின்படி, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மீது ஊழல் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடர முடியும் என்று சுட்டிக்காட்டி, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆதாரங்களைச் சமர்ப்பித்தனர்.

2015 ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறி விநியோ கத்தின் மூலம் அரசுக்குப் பத்து பில்லியன் ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டது என்று இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு



தாக்கல் செய்த முறைப்பாட்டைப் பரிசீலித்த பின்னர் நீதி வான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அர்ஜுன மகேந்திரன் சந் தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார் என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2015 பெப்ரவரி 27 அன்று நடைபெற்ற பிணைமுறி ஏலத்தில் அரசுக்கு 688 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத் தியது உட்பட 23 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

# குளவிக்கொட்டுக்கு இலக்கான வயோதிபப் பெண் உயிரிழப்பு

கருங்குளவிக் கொட்டுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்த வயோதிப பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொடிகாம வீதி, புலோலி தெற்கைச் சேர்ந்த கண பதிப்பிள்ளை அன்னபூரணம் (வயது 83) என்பவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பனையால் விழுந்த கூட்டில் இருந்து கலைந்த குளவிகள் பல அவரைக் கொட் டிய நிலையில் உடனடியாக பருத் தித்துறை ஆதார வைத்தியசாலை அவ சர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் மாரடைப் பால் மரணம் சம்பவித்ததாக அறிக்கை யிடப்பட்டுள்ளது.



# உளநல தினத்தை முன்னிட்டு பருத்தித்துறையில் நடைபவனி

சர்வதேசஉளநலதினத்தைமுன்னிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல சிகிச்சை பிரிவினரால் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான நடைபவனி பிரதான வீதி ஊடாக மந்திகை சிலையடி சந்தி ஊடாக சென்று சாவகச்சேரி வீதி ஊடாக வைத்தியசாலையை சென்றடைந்தது.

“உளநிறைவானகுடும்பமேஆரோக்கியமான நாட்டின் அத்திவாரம்“ எனும் தொனிப் பொருளில் இடம் பெற்ற இந்த விழிப்புணர்வு நடைபவனியில் வைத்தியர்கள், பாடசாலை மாணவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பிரதேச சபை மற்றும் நகரசபையினர் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நடை பவனிக்கான பாதுகாப்பினை பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர்.

# பாலசுப்ரமணிய வித்தியாலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற கண்காட்சி



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் செ.பகீதரன் தலைமையில் நேற்று கல்விக் கண்காட்சி ஒன்று சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சியை அயலில் உள்ள பாடசாலை மாணவர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் பார்வையிட்டுப் பயன்பெற்றனர்.

இவ்வாறான கண்காட்சிகளை பாடசாலைகளில் நடாத்துவதன் மூலம் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள் வளர்வதோடு. மாணவர்களின் புதிது புனையும் ஆற்றலும் வளர்ச்சியடைகிறது.

இந்தக் கண்காட்சியில் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம் கலந்து சிறப்பித்திருந்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதிர்காலம் சந்தேகமே!

இலங்கை, பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்பு, 2019 இல் இருந்த நிலைக்கு அடுத்த ஆண்டு திரும்பக் கூடிய வாய்ப்பு உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச்சபை அமர்வில் கலந்து கொண்ட அவர், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களை நியூயோர்க்கில் சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி அப்போதைய இலங்கை, கடன்களை செலுத்த முடியாது என அதிகாரபூர்வமாக அறிவித்து வங்குரோத்து நாடாக மாறியது. இன்று அந்த நெருக்கடியை விரைவாக தீர்த்து வைத்த நாடாக அது மாறியுள்ளது என்று அவர் பெருமிதம் தெரிவித்திருக்கின்றார்.

“எங்களுக்கு இருந்த சவால்களில் ஒன்று பொருளாதார நெருக்கடியைத் தணிப்பது. மற்றொன்று இலங்கையில் மீண்டும் ஒருபோதும் இதுபோன்ற நெருக்கடி ஏற்படாத வகையில் ஸ்திரத்தன்மையை உருவாக்குவது. பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருந்த நாட்டை நாம் தற்போது படிப்படியாக மீட்டு வருகிறோம். அனைத்து சர்வதேச அமைப்புகளும், மதிப்பீட்டு நிறுவனங்களும், சர்வதேச நிதி நிறுவனங்களும், இலங்கை நெருக்கடியின் போது விரைவாக தன்னை நிலைப்படுத்திக் கொண்ட ஒரு நாடாக இருந்ததாக அறிக்கைகளை வழங்கியுள்ளன.

“ஒரு பொருளாதாரம் இப்படிச் சரிந்தால், ஒரு நாடு அதன் முந்தைய நிலைக்குத் திரும்ப 10 ஆண்டுகள் ஆகும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். 2022ஆம் ஆண்டில் நாடு சரிந்திருந்தால், முந்தைய நிலைக்குத் திரும்ப 2032 ஆகும். ஆனால் நாடு சரிவதற்கு முன்பு 2019 இல் இருந்த பொருளாதாரத்தை அடுத்தாண்டு நாம் அடைய முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.” - என்று அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க குறிப்பிட்ட இரண்டு விடயங்களில் ஒன்று உடனடி பொருளாதார நெருக்கடியை தணிப்பது. அதை வெற்றிகரமாக முன்னெடுத்தவர் இந்த ஜனாதிபதி அல்லர். அவருக்கு முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

எதிர்பாராத விதத்தில் நெருக்கடியைத் தவிர்த்து, தணித்து, சுமுகநிலையை ஏற்படுத்துவதற்கு அவருடைய அணுகுமுறையும் தந்திரங்களும்தான் காரணம். நெருக்கடி கால பொருளாதாரத் தந்திரோபாயத்தை அவர்தான் வகுத்தார். அதன்படிதான் நாடு செயற்பட்டு ஓரளவு மூச்சு விடக் கூடிய நிலைக்கு வந்தது.

அடுத்த கட்டமாக வங்குரோத்து நிலையிலிருந்து மீளுவதாயின், நிறுத்தப்பட்ட கடன் மீளளிப்பை மீண்டும் இலங்கை செலுத்தத் தொடங்க வேண்டும். இலங்கை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 2028 வரையே அதற்கான சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது. 2028 இலிருந்து இந்தக் கடன் மீளளிப்பை இலங்கை மேற்கொள்ளத் தொடங்கும்போது, அது நாட்டுக்குப் பெரும் பொருளாதார நெருக்கடியைத் தரும். அதற்கான பொருளாதார திட்டங்களையும் வழிமுறைகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்தராயினும், அவற்றை முற்கொண்டு செல்லும் பொறுப்பு இப்போது அநுர குமார திஸநாயக்கவின் தோள்களிலேயே விழுந்துள்ளன. அதில் அவர் வெற்றி பெறுவாரா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

2028ல் கடன் மீளளிப்பின் போது வரக்கூடிய நெருக்கடியைச் சமாளிக்கக்கூடிய நிலையில் இன்னும் நாடு தயாராகவில்லை. அதற்கான முன் நகர்வை - முன்னேற்றத்தை - ஜனாதிபதி அநுராவின் அரசு முன்னெடுத்து செல்வதாகவும் தெரியவில்லை என்பதுதான் பொதுவான அபிப்பிராயம். இன்னும் மூன்று ஆண்டுகளில் இலங்கையின் அடுத்த நிலைமை தெளிவாகும்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த நபர் இரண்டாயிரம் ரூபா பணத் துக்காக அந்தத் துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தார் என அங்கிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்.

அது உண்மையாக இருக்கலாம்.


ஆனால் துண்டுப் பிரசுரத்தை வெளி யிட்ட தரப்பு யார் என்பது குறிப்பிடப்படாத – அநாமேதய – பிரசுரமாக அது இருந்தது என்பது தவறுதான்.

ஆனால் அந்தத் துண்டுப் பிரசுரத் தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சைக்கிள்



கட்சியைக் 'கடி'ப்பனவாக இருந்தாலும், அவை மறுக்க முடியாத – மறைக்க முடியாத– உண்மைகள் என்பதை குறிப் பிட்டேயாக வேண்டும். அதனால் அந்தப் பிரசுரத்தில் குறிக்கப்பட்ட விடயங்களை இங்கு மறுபிரசுரம் செய்கிறேன்.

இப்படி மறுபிரசுரம் செய்வதனால்



அரசியல் கட்சிக்கான வேண்டுகோள்

மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்காகவே மக்களாலே அரசியல் பிரமுகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் மக்களுக்கான சேவையினை மட்டுமே முன்னெடுக்க வேண்டும். இச் சேவையின் ஊடாக மக்கள் இவர்களை விரும்ப வேண்டும். இன்று எமது தமிழ் கட்சிகள் சில மக்களில் எல்லா விடயங்களுக்குள்ளும் மூக்கை நுழைத்து அதனை அரசியல் ஆக்கப்பார்க்கின்றனர். எங்களுக்கான உரிமைப் போராட்டத்தில் எத்தனையோ போராளிகள் ஆயுத வழியிலும், அகிம்சை வழியிலும், தன்னைத்தானே வெடித்துச் சிதறியும் போராடி மாவீரகள் ஆனார்கள். இவர்கள் இன்றும் எங்களுக்கு தெய்வங்களே. இந்த தெய்வங்களை நாம் வணங்குவதற்கு யாரும் தடைசெய்யவோ, அரசியல் ஆக்கவோ கூடாது. ஆனால் இந்த மாவீரத் தெய்வங்களின் வழிபாட்டினை அரசியல் கட்சி ஒன்று தனது அரசியலுக்காக பயன்படுத்துகின்றது.

எங்களுடைய மண்ணுக்காக அகிம்சை வழியில் போராடி ஆகுதியாகிய திலீபன் அண்ணாவின் வணக்க நிகழ்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றது. இந் நிகழ்வு எக்காலமும் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் அரசியல் கட்சி ஒன்று உள்நுழைந்து தானே இதனை செய்வதாக காட்டி வருகின்றது. இது மட்டுமில்லாது வணக்கத்தை செலுத்த வரும் சிலரை வணக்கம் செலுத்த விடாமல் திருப்பி அனுப்புகின்றனர். அண்மையில் வணக்கம் செலுத்த வந்த அமைச்சர் ஒருவரையும் திருப்பி அனுப்பியுள்ளனர். இவ்வாறு செய்வதற்கு இவ் அரசியல் கட்சிக்கு யார் அதிகாரம் கொடுத்தது. அழையா விருந்தினராக வந்த இவர்கள் ஏன் இவ்வாறு செய்கின்றனர்.

ஒரு வணக்கஸ் தலத்தில் வணக்கம் செலுத்த அனைவரிற்கும் உரிமை உண்டு. இன, மத வேறுபாடின்றி இது மதிக்கப்படல் வேண்டும். இச் செயற்பாடு அரசியலிற்கு அப்பாற்பட்டதொன்றாகும். இதில் காட்டு மிராண்டித்தனமாக யாரும் நடக்கக் கூடாது. அதுவும் மக்களின் சேவகர்கள் இதனை செய்யக்கூடாது. அந்த வகையில் மக்களால் முன்னெடுக்கப்படும் இவ் வணக்க நிகழ்வில் அரசியல் கட்சிகளின் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதோடு, தற்போது இதில் நுழைந்துள்ள அரசியல் கட்சி இதிலிருந்து உடன் வெளியேற வேண்டுமென வேண்டுகின்றோம்.

ஏற்பாட்டுக்குழு

அதிலுள்ள விடயங்களுக்கு நான் பொறுப்பாகி விட மாட்டேன். ஆயினும் அதைப் பிரசுரித்த பொறுப்பில் இருந்து நான் விலகி விடவும் முடியாது.

அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட விவரம் இதுதான்:–

மக்களுக்கான சேவைகளைச் செய் வதற்காகவே மக்களாலே அரசியல் பிர முகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் மக்களுக்கான சேவையினை மட்டுமே முன்னெடுக்க வேண்டும். இச் சேவையின் ஊடாக மக்கள் இவர்களை விரும்ப வேண்டும். இன்று எமது தமிழ் கட்சிகள் சில மக்களில் எல்லா விடயங் களுக்குள்ளும் மூக்கை நுழைத்து அதனை அரசியல் ஆக்கப் பார்க்கின் றனர். எங்களுக்கான உரிமைப் போராட் டத்தில் எத்தனையோ போராளிகள் ஆயுத வழியிலும், அகிம்சை வழியிலும், தன் னைத்தானே வெடித்துச் சிதறியும் போராடி மாவீரர்கள் ஆனார்கள். இவர்கள் இன்றும் எங்களுக்கு தெய்வங்களே. இந்த தெய்வங்களை நாம் வணங்குவ தற்கு யாரும் தடைசெய்யவோ, அரசி யல் ஆக்கவோ கூடாது. ஆனால் இந்த மாவீரத் தெய்வங்களின் வழிபாட்டினை அரசியல் கட்சி ஒன்று தனது அரசியலுக் காக பயன்படுத்துகின்றது.

எங்களுடைய மண்ணுக்காக அகிம்சை வழியில் போராடி ஆகுதியாகிய திலீபன் அண்ணாவின் வணக்க நிகழ்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந் நிகழ்வு எக்காலமும் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் அரசியல் கட்சி ஒன்று உள்நுழைந்து தானே இதனைச் செய்வதாகக் காட்டி வருகின்றது. இது மட்டுமில்லாது வணக் கத்தை செலுத்த வரும் சிலரை வணக்கம் செலுத்த விடாமல் திருப்பி அனுப்புகின்ற னர். அண்மையில் வணக்கம் செலுத்த வந்த அமைச்சர் ஒருவரையும் திருப்பி அனுப்பியுள்ளனர். இவ்வாறு செய்வதற்கு இவ் அரசியல் கட்சிக்கு யார் அதிகாரம் கொடுத்தது? அழையா விருந்தினராக வந்த இவர்கள் ஏன் இவ்வாறு செய்கின் றனர்?

ஒரு வணக்க ஸ்தலத்தில் வணக்கம் செலுத்த அனைவரிற்கும் உரிமை உண்டு. இன, மத வேறுபாடின்றி இது மதிக்கப்படல் வேண்டும். இச்செயற்பாடு அரசியலிற்கு அப்பாற்பட்டதொன்றாகும். இதில் காட்டு மிராண்டித்தனமாகயாரும்நடக்கக்கூடாது. அதுவும் மக்களின் சேவகர்கள் இதனை செய்யக்கூடாது. அந்த வகையில் மக்க ளால் முன்னெடுக்கப்படும் இவ் வணக்க நிகழ்வில் அரசியல் கட்சிகளின் தலை யீடுகள் இருக்கக் கூடாது என்பதோடு. தற் போது இதில் நுழைந்துள்ள அரசியல் கட்சி இதிலிருந்து உடன் வெளியேற வேண்டுமென வேண்டுகின்றோம் – என் றுள்ளது.

இத்தகைய – நாகரிக வார்த்தைகளில் – யாரையும் பெயர் குறிப்பிட்டுச் சுட்டிக்காட் டாமல் – கௌரவமான சொல்லாடல்க ளில் அமைந்த ஒரு துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தவரை முறையற்ற விதத்தில் கையாண்டமை மூலம் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுத் தொப்பி கனகச்சிதமாகத் தங்களுக்கு உரியதுதான் என்பதை சைக்கிள்கட்சிக் காரர்கள் அந்த இடத்திலேயே நிரூ பித்திருக்கின்றார்கள். அவ்வளவு தான்...!

சரியாகத்தான் எழுதப்பட்டுள்ளது அந்தத் துண்டுப் பிரசுரம் என்பது மட்டும் உண்மை.

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மரியாதையுடன் வரவேற்றதுடன், பின்னர் அவர்கள் சிநேகபூர்வ உரை யாடலில் ஈடுபட்டனர்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தச் செயல்முறையின் முன்னேற் றம், இலங்கையைப் பொருளாதார ரீதி யாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதி யாகவும் புதிய தளத்திற்கு உயர்த்துவதற் காக அரசு தற்போது செயற்படுத்தி வரும் செயற்றிட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி அநுரகுமார, ஐ.நா. பொதுச்செயலா ரிடம் விளக்கினார்.

இலங்கை அரசின் புதிய முற்போக் கான செயற்றிட்டத்தைப் பாராட்டிய பொதுச் செயலாளர், அதற்காக ஐக்கிய நாடு கள் சபை முன்நிற்பதாகவும், முழு ஆதர வையும் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோருடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட னர்.

## அம்பாந்தோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூட்டில் 58 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், துப்பாக்கியால் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

சந்தேகநபர்களைக் கைது செய்வ தற்கான தீவிர விசாரணைகள் திஸ்ஸ மஹாராம பொலிஸாரால் முன்னெடுக்கப் படுகின்றன.





## எந்த அழுத்தத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை, சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல், செயற்றிறனான அரச சேவையை ஏற்படுத்துதல் மற்றும் மோசடி மற்றும் ஊழலை முடிவுக்குக் கொண்டுவருதல், போதைப்பொருட்களுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுதல் மற்றும் ஒரு வருட குறுகிய காலத்தில் ஒரு சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல் ஆகியவற்றில் தற்போதைய அரசு ஒரு தீர்க்கமான திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது . அனைத்து துறைகளிலும் இந்த சாதனைகள் முன்னோக்கி கொண்டு செல்லப்படுமே தவிர எக்காரணம் கொண்டும் திருப்பியமைக்கப்படாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடு எதிர்கொள்ளும் அடுத்த சவால், அடைந்த பொருளாதார வெற்றிகள் நாட்டு மக்களைச் செல்வதை உறுதி செய்வதாகும் என்றும், இந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டம் அந்த நோக்கத்தை மனதில் கொண்டு தயாரிக்கப்படுகின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

அமெரிக்க நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் நியூயோர்க்கில் உள்ள ஸ்டெடன் ஜலண்ட் கலைக் கூடத்தில் நடைபெற்ற அமெரிக்காவில் வசிக்கும் இலங்கை சமூகத்தினருடனான சந்திப்பில் பங்கேற்றபோது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில் இலங்கை தொழில்வல்லுநர்கள் உட்பட அமெரிக்காவில் வசிக்கும் பெருந்தொகையானவர்கள் பங்கேற்றது. அவர்களின் பிரச்சினைகளும் இங்கு ஆராயப்பட்டதோடு இலங்கையின் புதிய பொருளாதார மாற்றத்திற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பு பாராட்டப்பட்டது.

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் புதிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றம் குறித்து அவர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இலங்கைக்கு அச்சமின்றி வந்து முதலீடுகளைச் செய்வதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு பங்களிக்குமாறு அவர்களிடம் கோரினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய முழு உரை பின்வருமாறு:–

“கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு, நான் நியூயோர்க் நகரில் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். கடந்த வருடம் செப்டெம்பர் 21 ஆம் திகதி நாங்கள் அடைந்த வெற்றியில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் பெரும் பங்காற்றினர். அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

கடந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து புதிய அரசாங்கத்தை அமைக்க நீங்கள் ஏன் முடிவு செய்தீர்கள்? அந்த முடிவு ஒரு சாதாரண முடிவு அல்ல. நாங்கள் தலைமுறை தலைமுறையாக அரசியல் உரித்துள்ள குழு அல்ல. ஆனால் 2019 தேர்தலில் 3மூ வாக்குகளைப் பெற்ற ஒரு இயக்கம்.

இருப்பினும், 2024 ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் பாரிய வெற்றியைப் பெற்றோம். அதைத் தொடர்ந்து நடந்த பொதுத் தேர்தலில், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இலங்கை வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் நாங்கள் ஒரு பெரிய வெற்றியைப் பெற்றோம்.

அந்த வெற்றியை அடைந்து வருடம் கடந்துவிட்டது. இந்த அரசாங்கம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது? அந்த நோக்கத்துக்கு ஏற்றவாறு முடிவுகள் எட்டப்பட்டதா? இல்லையா? அதன் அடிப்படையில் கடந்த ஆண்டு குறித்து மீளாய்வு செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஆனால், இந்த ஆட்சியை உருவாக்குவதற்கு பங்களிக்காத மற்றும் அதை எதிர்த்த குழுக்களின் அளவுகோல்களால் நம்மை அளவிட நாங்கள் தயாராக இல்லை. இந்த மாற்றத்திற்கு வழிவகுத்த காரணிகளைக் கொண்டே எம்மைப் பற்றி தீர்மானிக்க வேண்டும்.

நீங்கள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும், நம் நாட்டில் 2022/2023 ஆம் ஆண்டு பற்றி எழுதினால், நாடு வங்குரோத்தடைந்த காலகட்டமாக அது எழுதப்படும். 2022 ஏப்ரல் 12ஆம் திகதி, கடனை செலுத்த மாட்டோம் என்று அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அனைத்தும் வீழ்ச்சியடையத் தொடங்கின. அபிவிருத்தித் திட்டங்கள் பாதியில் நின்றுவிட்டன, தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர். சாதாரண மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை மேற்கொள்ள போதுமான வருமானம் இல்லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது. பொருளாதார ரீதியாக ஒரு நாட்டிற்கு ஏற்படக்கூடிய அனைத்து பேரழிவு சூழ்நிலைகளும் எழுந்தன. இது எத்தகையதென்றால் இலங்கையில் முதல் முறையாக, ஆட்சியாளரை மக்களே தூக்கி எறிந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர், நம் நாட்டில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்–துள்ளன. இருப்பினும், இலங்கையில் முதல் முறையாக, மக்கள் தெருக்களில் இறங்கி தேர்தல் இல்லாமல் ஆட்சியாளர்களை துறத்தியடித்தார்கள். இது பொருளாதாரத்தில் ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கியது. அதனால், அந்த பொருளாதார நெருக்கடியைத் தணித்து, இலங்கையில் மீண்டும் ஒருபோதும் நடக்காத வகையில் ஸ்திரத்தன்மையை உருவாக்குவதே எங்களுக்கு பிரதான சவாலாக இருந்தது. ஒரு வருடத்தில், நமது நாடு இழந்த பொருளாதார நெருக்கடியில் கணிசமான அளவை சீரமைத்து, ஸ்திரத்தன்மையை உருவாக்க முடிந்துள்ளது. இன்று, பொருளாதார நெருக்கடியை மிக வேகமாகத் தணித்த நாடாக இலங்கை அறிமுகப்படுத்தப்படத் தொடங்கியுள்ளது. இது சர்வதேச நிதி நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற பொருளாதார வீழ்ச்சியில், அது நாட்டிற்கு இழந்த ஒரு தசாப்தமாகிறது என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, ஒரு நாடு அதன் முன்பிருந்த நிலையை அடைய 10 ஆண்டுகள் செல்லும். இருப்பினும், 2019ஆம் ஆண்டு இலங்கை கொண்டிருந்த பொருளாதாரத்தை அடுத்த ஆண்டு எட்ட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். மிகக் குறுகிய காலத்தில் நாங்கள் அதை மேற்கொண்டுள்ளோம். அனைத்து தரவுகள் மற்றும் புள்ளிவி–வரங்களின் அடிப்படையில் இதை நாம் கணிக்க முடியும்.

நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு வழிவகுத்த முக்கிய காரணிகளில் ஒன்று, எமக்குத் தேவையான அளவுடொலர்களை

08








## எந்த அழுத்தத்துக்கும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பாதிக்க தவறியமையாகும். இருப்பினும், டொலர்களை சம்பாதிக்கக் கூடிய நான்கு முக்கிய துறைகளிலும் இந்த ஆண்டு வரலாற்றில் மிக உயர்ந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு, சுமார் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகை தருவார்கள். அதன்படி, 2025 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்த ஆண்டாக இருக்கும்.

மேலும், இந்த ஆண்டு வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு அதிக அளவு டொலர்கள்பெறப்படும்ஆண்டாகஇருக்கும்.அதன்படி, இந்த ஆண்டு அதிக வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டாக இருக்கும். நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கழித்து, ஒரு பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுள்ளோம்.

மேலும், துறைமுக நகரத்தை அண்டியதாக 1.4 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி, இந்த ஆண்டு வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் ஈர்க்கப்பட்ட ஆண்டாகவும் இருக்கும். நாம் எதிர்கொண்டிருக்கும் டொலர் கையிருப்பு சிக்கலை எம்மால் தீர்க்க முடியும். 2028 ஆம் ஆண்டுக்குள் நமது கடன் திருப்பிச் செலுத்துதலைத் தொடங்கும் சவாலை நாம் எதிர்கொள்கிறோம்.

எனவே, 2028 ஆம் ஆண்டுக்குள், கடனைத் திருப்பிச் செலுத்தத் தேவையான திறன் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் செயல்படுகிறோம். அதன்படி,இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தும் நெருக்கடியிலிருந்து கடனைத் திருப்பிச் செலுத்தும் சூழ்நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

நாம் எதிர்கொண்ட அடுத்த நெருக்கடி, அரசாங்கத்துக்குத் தேவையான வருவாயை உருவாக்கத் தவறியது. நமது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் வருவாய் ஒருபோதும் பெறப்பட்டது கிடையாது. இருப்பினும், இலங்கையில் முதல் முறையாக, 2025 ஆம் ஆண்டில் நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான அரச வருவாயைப் பெற்றுள்ளோம். மேலும், எப்போதும் அரசாங்கத்துக்கு வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டை விட அதிக செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தது. இந்த ஆண்டு, அதுவும் குறைந்துள்ளது. எனவே, நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கியுள்ளோம். இருப்பினும், அது போதுமானதல்ல.

இந்த பொருளாதாரம் எட்டியுள்ள நன்மைகள் சாதாரண மக்களைச் சென்றடையவேண்டும்.பொருளாதாரத்தைஸ்தீரப்படுத்தாமல், அந்த முடிவுகளை கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு வழங்க முடியாது. எனவே, எங்கள் முதல் சவால் பொருளாதாரத்தை பலப்படுத்துவதாகும்.இப்போது நாங்கள் எதிர்கொள்ளும் சவால் பொருளாதாரத்தில் அடையப்பட்ட இந்த வெற்றிகளைகீழ்மட்டத்தைச்சென்றடையஇடமளிப்பதாகும். இந்த ஆண்டு, எங்கள் வரவு - செலவுத் திட்டம் முற்றிலும் அந்த நோக்கத்தையே கொண்டுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கான அரசாங்க தலையீடு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை உருவாக்குதல் மற்றும் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற பல துறைகளை இலக்காகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டத்தை நாங்கள் தயாரிக்கின்றோம்.

அதேபோன்று, நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, இந்த நாட்டு மக்களுக்கு எங்கள் அரச கட்டமைப்பு தொடர்பில் எதிர்பார்ப்புகள் இருந்தன. எங்கள் அரச கட்டமைப்பு மிகவும் செயற்திறனற்ற மற்றும் செயலிழந்த அரச கட்டமைப்புமாகும். எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவதில், இந்த அரச கட்டமைப்பின் செயற்திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.

அரசியல் நெருக்கத்தின் அடிப்படையில் மட்டுமே அரச சேவையை நிரப்புவதால், அரச சேவைக்கு அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் நடைபெறவில்லை. எனவே, 70 ஆயிரம் பேரை புதிதாக அரச சேவையில் இணைக்க முடிவு செய்துள்ளோம். அரச சேவையை கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்குத் தேவையான சம்பள அளவுகளையும் உருவாக்கியுள்ளோம். இலங்கை வரலாற்றில் மிக உயர்ந்த சம்பள உயர்வை நாங்கள் வழங்கியுள்ளோம். இந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும், அந்தச் சம்பள உயர்வுக்காக 11 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் தலா 11 ஆயிரம் கோடி ரூபா வீதம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

அதன்படி, 2027 ஆம் ஆண்டாகும் போது சம்பளம் 33 ஆயிரம் கோடி ரூபாவாக உயர்த்தப்படும். அரச சேவையின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தையும் நாங்கள் ஆரம்பித்துள்ளோம். அடுத்த ஆண்டுக்குள், அரசாங்கத்துடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் டிஜிட்டல் முறை மூலம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அரச சேவையில் பல சீர்திருத்தங்களையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். உள்நாட்டு இறைவரித்திணைக்களம்,கலால்திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்படும்.

மேலும், ஒற்றை சாளரத்தின் மூலம் இவை அனைத்தையும் மேற்கொள்வதற்கான கட்டமைப்பின் அவசியத்தை ஏற்றுமதியாளர்களும் முதலீட்டாளர்களும் நீண்டகாலமாக சுட்டிக்காட்டி வருகின்றனர். இதற்காக ஒரு புதிய கட்டமைப்பை அறிமுகப்படுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தற்போது அது குறித்து இறுதி உடன்பாட்டை எட்டியுள்ளோம். வீழ்ச்சியடைந்துள்ள அரச சேவையை வலுப்படுத்த தேவையானபணிகளைநாங்கள்செய்துள்ளோம்

மேலும், பழைய நிறுவன கட்டமைப்புகளை நாங்கள்

09





## எந்த அழுத்தத்துக்கும்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மாற்றுகிறோம். மின்சார சபையை பழையமுறைமையில்தொடர்ந்துமுன்னெடுக்க முடியாதுள்ளது. எனவே, அதை திறம்படச் செய்ய ஒரு புதிய நிறுவன கட்டமைப்பை நாங்கள் முன்மொழிந்துள்ளோம். இந்த வகையில் திறம்படச் செய்யக் கூடிய நிறுவனங்களுக்கு புதிய கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துகிறோம். அரச நிறுவனங்களை நெறிப்படுத்த நாங்கள் கணிசமான அளவு பணிகளைச் செய்துள்ளோம். இன்னும் மேற்கொள்ள வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன.

மேலும், சிறந்த சர்வதேச உறவுகளை மக்கள் எதிர்பார்த்தனர். சர்வதேச அரங்கில் நமது நாடு குறிப்பிட்டளவில் கருப்பு பட்டியல் நாடாக மாறியிருந்தது. ஜனநாயகத்தை மதிக்காத, ஊடகவியலாளர்களைக் கொலைசெய்யும், மனித உரிமைகளை மீறும், பொருளாதாரத்தையே சீர்குலைத்த மோசடி மற்றும் ஊழல் நிறைந்த நமது நாட்டை மீண்டும் உலகில் ஒரு பிரகாசமான நாடாக மாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது. எனவே, வலுவான இராஜதந்திர உறவுகளையும், சர்வதேச அரங்கில் இலங்கையின் நல்ல பிம்பத்தையும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. சர்வதேச அமைப்புகளில் இன்று இலங்கை தொடர்பில் ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மற்றும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரைச் சந்தித்த போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டது. எனவே, மீண்டும் எமது நாட்டிற்கு பிரகாசத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெற நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம். அதில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை அடைந்துள்ளோம்.

மேலும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்ய எமக்கு தேவையாக இருந்தது. நமது நாட்டில், அதிகாரத்திற்கும் செல்வத்திற்கும் முன்பாக வலைந்து கொடுக்கும் ஏழைகளைத் தண்டிக்கும் ஒரு சட்டம் இருந்தது. நமது நாட்டில் சட்டத்தை நெருங்கக்கூடியவர்களும், முடியாதவர்களும் இருக்கிறார்கள் என்ற ஒரு கருத்து நாட்டிலும் பொது சமூகத்திலும் இருந்தது. இருப்பினும், இன்று இலங்கையில் சட்டத்தை அடைய முடியாத எந்தவொரு நபரும் இல்லை என்பதை நடைமுறையில் நிரூபித்து வருகிறோம். யார் வேண்டுமானாலும் சட்டத்தை அணுக முடியும். இலங்கையில் இதுபோன்ற ஒரு தீர்க்கமான திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. நாட்டில் சட்டத்தின் ஆட்சியை முறையாக நிலைநாட்டுவது நமது பொறுப்பாகும். நாம் எடுத்துள்ள முன்னெப்புகளை தொடர்ந்து முன்கொண்டு செல்வோமே தவிர பின்நோக்கி திருப்ப மாட்டோம்.

எங்களுக்கு வாக்களிக்கும் போது மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகள் இருந்தன. அந்த எதிர்பார்ப்புகள் மற்றும் நம்பிக்கைகளுடன் அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் இணைந்திருக்கிறோம். மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாங்கள் பணியாற்றுகின்றோம். இதில் யாருக்கும் அடிபணிய மாட்டோம்.

அதேபோல், மோசடி மற்றும் ஊழலை நிறுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்நாட்டு மக்கள் மத்தியில் இருந்தது. எங்கள் நாட்டில் அரசியல்வாதியின் வீண் விரயம் ஒரு சட்டமாக மாறியிருந்தது. அவற்றைப் பற்றி கேள்வி கேட்க முடியாது. அரசியல்வாதிகளுக்கு தாம் விரும்பியவாறு பொதுமக்களின் பணத்தை வீணடிக்க முடியும் என்ற எண்ணக்கருவொன்று இருந்தது. அது தவறானது. பொருளாதாரம் பெரிதும் வீழ்ச்சியடைந்து, எரிவாயு, எரிபொருள் இல்லாமல் இருந்த நிலையில் கூட ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பிக்க 470 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அரசியல்வாதிகளுக்கு அரச பணம் செலவிடுவதில் வரம்புகள் இருக்கவில்லை. அவர்களின் விருப்பத்தின் படி செலவு செய்யலாம் என்று நினைத்தார்கள். ஜனாதிபதிக்கு வரம்பு இல்லை.

ஆனால், அந்த வரம்பு அந்த பதவியில் அமர்ந்திருப்பவரின் நாகரிகத்திலேயே அடங்கியுள்ளது. அப்படியானால் நாங்கள் சட்டத்தின் மூலம் அந்த வரம்பை உருவாக்க வேண்டியுள்ளது. அதற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அந்த சட்டத்தின் வரம்பாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து இல்லங்கள் வழங்கப்படாது. இது யாரையும் பழிவாங்குவதற்காக அல்ல. எங்களுக்கு யாருடனும் தனிப்பட்ட குரோதம் கிடையாது. எங்கள் நாட்டுக்கு சிறந்த அரசியல் முன்மாதிரி தேவை. அது உருவாகும் வரை நாங்கள் சட்ட வரம்புகளை உருவாக்குகிறோம்.

பொதுமக்களின் பணத்தில் ஒரு சதமும் வீணாக்காத அரசாங்கம் இலங்கையில் முதல் முறையாக இன்று அமைக்கப்பட்டுள்ளது. அதுதான் மக்கள் ஆணையின் சாராம்சம். இந்த காரணிகளின் விளைவாகவே நமது நாடு வீழ்ச்சியடைந்தது . எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு அனைத்து காரணிகளிலும் மாற்றம் தேவை. எனவே இலஞ்சம், ஊழலற்ற அரசொன்றை உருவாக்குவதற்கான மக்கள் ஆணையின் எதிர்பார்ப்பை நாங்கள் தற்போது நிறைவேற்றி வருகின்றோம்.

அதேபோல், மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். இன்று நாங்கள் அதைச் செய்து வருகிறோம்.அதேபோல்,சர்வதேசஅளவில்எங்கள் நாடு குறித்த கறைபடிந்த பிம்பத்தை உருவாக்கிய கொலைகள் மற்றும் கடத்தல்கள் குறித்து நீதி தேவை. அதற்கு நியாயம் தேவை. அதனைப் பற்றி நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் . படையினர்களை வேட்டையாடுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. போரின்போது அவர்கள் செய்த பணி குறித்து எங்களுக்கு பாராட்டு உள்ளது. ஆனால் அதற்கு மறைமுகமாக செய்த குற்றங்கள் குறித்து நாங்கள் விசாரணை நடத்துகிறோம்.

நமது நாட்டில் நீதி பற்றிய கருத்து வெறும் சட்டத்தின் இருப்பை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படவில்லை. நீதி பற்றிய சமூகக் கருத்து, தற்போதுள்ள சட்டம் நியாயமாக செயற்படுத்தப்படுகின்றது என்ற மனநிலையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. சட்டம் இருப்பது மட்டுமே சமூகத்தில் நீதி பற்றிய கருத்தை உருவாக்காது. அநீதி ஏற்படும் தருணத்தில் நீதி செயற்படுத்தப்படும் என்ற கருத்து உருவாக்கப்பட்டால் மட்டுமே நீதி பற்றிய கருத்து உருவாக்கப்படுகின்றது. நாங்கள் அதை மேற்கொண்டு வருகிறோம்.

குற்றங்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை நாம் ஒருபோதும் அரசியல் கோணத்தில் நடத்துவதில்லை. இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பன தேவையான விசாரணைகளை நடத்துகின்றன. தேவையான வசதிகளை மட்டுமே நாங்கள் வழங்குகின்றோம். அதற்கான அழுத்தம் கொடுப்பது எங்கள் பணியல்ல தற்போதுள்ள அரசாங்கத்தை அடிப்படையாகக் கொண்டு அன்றி, தற்போதுள்ள நிறுவனங்களின் அடிப்படையில் அவை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த நிறுவனங்களை வலுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், நமது நாடு எதிர்கொண்டுள்ள போதைப்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்க நாங்கள் பாடுபட்டு வருகிறோம். எனவே, இந்த மறைவான அரசை நசுக்க நாங்கள் பாடுபடுகிறோம். ஒரு நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருக்க முடியாது. ஒரு அரசாங்கமே இருக்க வேண்டும். அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு அரசு பொறிமுறையின் மூலம் மட்டுமே அரசு செயற்படுத்தப்பட வேண்டும். எனவே, நமது நாட்டுக்குத் தேவையான மாற்றங்களை பல்வேறு கோணங்களில் செய்து வருகின்றோம்.

எனவே, ஒரு வருடத்திற்கு முன்பு எங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பாதையில் நாங்கள் இறங்கியுள்ளோம். பாதியில் நிறுத்தப்பட்ட திட்டங்களையும் மீண்டும் ஆரம்பித்துள்ளோம். கட்டுநாயக்க விமான நிலையத் திட்டம் 2023 இல் நிறைவுசெய்யப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். ஆனால் அது பாதியில் நிறுத்தப்பட்டது. எனவே, அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்திற்குள் அதன் பணிகளை மீண்டும் தொடங்க திட்டமிட்டுள்ளோம். மேலும், பாதியில் நிறுத்தப்பட்ட நிர்மாணப் பணிகள் ஏராளமாக உள்ளன. கலாசார அமைச்சர் மாத்தறையில் இருந்ததால், சார்க் கலாச்சார மையம் என்ற பாரிய கட்டிடம் மாத்தறையில் கட்டப்பட்டது. இப்போது எதுவும் செய்ய முடியாது. யாரும் அதைப் பொறுப்பேற்க தயாராக இல்லை. அது பழுதடைந்து வருகிறது. இவற்றை மறுசீரமைத்து பயனுள்ள பணிகளுக்கு பயன்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

எனவே, நாங்கள் ஸ்திரத்தன்மை மற்றும் மறுசீரமைப்பை நோக்கி நகர்கிறோம்.எமக்கு மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடிந்துள்ளது. ஆனால் அது போதாது, எங்களுக்கு கால அவகாசம் தேவை. அதற்கு உங்கள் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இன்று, நாட்டில் உங்களுக்காக முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. உங்களிடமிருந்து எங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கூட தேவையில்லை, செயற்திட்டங்கள் மட்டுமே தேவை.

மேலும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களாக, சுற்றுலாத் துறைக்கு நீங்கள் பரந்த பங்களிப்பைச் செய்ய முடியும். தூதரகங்களுடன் இணைந்து பல்வேறு திட்டங்களை நாங்கள் ஏற்பாடு செய்யலாம். நாம் தூரமாக இருப்பதற்குப் பதிலாக பல்வேறு வழிகளில் இலங்கையுடன் தொடர்பு கொள்ளும் ஒரு சமூகமாக மாற அனைவரைக்கும் அழைப்பு விடுக்கின்றேன்." – என்றார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி, முன்னாள் பிரதம நீதியரசர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய மற்றும் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.





# நெதன்யாகு உரையாற்ற வந்ததும் வெளிநடப்பு செய்த பிரதிநிதிகள்

ஐ.நா பொதுச் சபையில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உரையாற்ற வந்ததும் அங்கிருந்து பல்வேறு நாட்டு தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பிரதிநிதிகள் பலரும் அவையை விட்டு வெளியேறினர்.

ஐ.நா பொதுச் சபையின் 80 ஆவது கூட்டம் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பங்கேற்று உரையாற்றினார். தனது உரையில் அவர், “பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது. அந்த அங்கீகாரம், இஸ்ரேலியர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு இணையானது. இந்த விவகாரத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் வெட்கப்பட வேண்டும். சிறிய ஆதரவுடன் சுமார் ஏழு மோதல்களை இஸ்ரேல் கையாள்கிறது” என்று பேசினார்.

முன்னதாக தனது உரையை நிகழ்த்துவதற்காக நெதன்யாகு மேடைக்கு வந்த சில நொடிகளில் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அவையில் இருந்த பல்வேறு நாட்டுத் தலைவர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பிரதிநிதிகள் பலரும் தங்கள் இருக்கைகளைவிட்டு உடனடியாக எழுந்து கூட்டாக வெளிநடப்பு செய்தனர்.

இதனால் நெதன்யாகு உரையின் போது பெரும்பாலான இருக்கைகள் வெற்றிடமாக இருந்தன. இது தொடர்பான காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. நெதன்யாகுவின் உரை காஸா எல்லையில் ஒலிப்பெருக்கிகள் வாயிலாக நேரடி ஒலிபரப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது; ஐ.நாவில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உரை

ஹமாஸ், ஹவுதி, ஹிஸ்புல்லா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் இயக்கத்தை தங்கள் தேசம் நசுக்கி உள்ளது எனவும் பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கடந்த ஆண்டு இங்கு பேசியபோது இந்த வரைபடத்தை நான் காண்பித்து இருந்தேன். இந்த வரைபடத்தில் ஈரானின் தீவிரவாத செயல்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரைபடம் உலகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எங்கள் பிராந்தியத்துக்கும், தேசத்துக்கும் இதே நிலைதான். அணு ஆயுதங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஈரான் உருவாக்கி வருகிறது. அதற்கான திட்ட பணியில் ஈரான் தீவிரம் காட்டுகிறது. இது இஸ்ரேலை மட்டும் அழிப்பதற்கானது அல்ல. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு இது அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதன்மூலம் மற்ற நாடுகளை ஈரான் மிரட்டி வருகிறது.



காசாவில் இருந்து ஹமாஸ், ஏமனில் இருந்து ஹவுதி, லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் செயல்பாட்டை நசுக்கி உள்ளோம். இஸ்ரேல் முயற்சியால் இந்த அமைப்புகளின் முக்கிய தலைவர்களை அழித்துள்ளோம். ஹமாஸ் படையினருக்கு எதிரான எங்களின் ராணுவ நடவடிக்கை தொடரும். நாங்கள் ஹமாஸ் வசம் உள்ள பிணைக் கைதிகளை மறக்கவில்லை. ஒவ்வொரு நொடியிலும் உங்கள் நினைவோடு இருக்கிறோம்.

பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது. அந்த அங்கீகாரம், இஸ்ரேலியர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு இணையானது. இந்த விவகாரத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் வெட்கப்பட வேண்டும். சிறிய ஆதரவுடன் சுமார் ஏழு மோதல்களை இஸ்ரேல் கையாள்கிறது.” என்று தெரிவித்தார்.

இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் பாலஸ்தீனத்தின் காசாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் ஹமாஸ் தீவிரவாத படையை சேர்ந்தவர்கள்மட்டுமல்லாதுஅப்பாவிமக்களுக்கு உயிரிழந்துள்ளனர். அங்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், அதை நெதன்யாகு தனது உரையில் மறுத்து பேசியுள்ளார்.

நெதன்யாகு தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை காரணமாக உள்நாடு மற்றும் உலக நாடுகளில் கடும் கண்டனத்தை இஸ்ரேல் பெற்றுள்ளது.

# கல்வி நிகழ்வில் நடிகர்கள் மூலம் விளம்பரம் தேடும் தமிழக அரசு

## நயினார் நாகேந்திரன் விமர்சனம்





தமிழக அரசின் கல்வி நிகழ்ச்சியில் நடிகர்கள், இயக்குநர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன்மூலம் அரசு விளம்பரம் தேடுகிறது என்று பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.

திருநெல்வேலியில் உள்ள நயினார் நாகேந்திரன் இல்லத்தில் அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகளான கேசவ விநாயகம், பொன்.ராதாகிருஷ்ணன், பொன்.பாலகணபதி உள்ளிட்டோருடன் நயினார் நாகேந்திரன் ஆலோசனை மேற்கொண்டார். 2 மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்த ஆலோசனையில், டில்லி சென்று வந்தது, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சி.வி.சண்முகம் ஆகியோரை சந்தித்தது, டி.டி.வி. தினகரனின் கருத்துகள் குறித்து கூட்டத்தில் பேசப்பட்டதாக தெரிகிறது.

இந்தக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சரியில்லை. கல்வியில் தமிழகம் பின்தங்கியே உள்ளது. பள்ளிகளுக்கு விடுமுறை அளித்துவிட்டு விழா நடத்தி அரசு சுய விளம்பரம் செய்துள்ளது. பாடசாலை கல்வித் துறையில் 4,000 பணி வெற்றிடங்கள் உள்ளன. அதை அரசு நிரப்பவில்லை. அரசு சிறப்பாக செயல்படுவதாக வார்த்தைகளில் சொல்லப்படுகிறது. ஆனால், நடைமுறையில் அதுபோன்ற நிலை இல்லை. அரசின் கல்வி நிகழ்ச்சியில் நடிகர்கள், இயக்குநர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் அரசு விளம்பரம் தேடுகிறது.

காமராஜர் ஆட்சியை தமிழகத்தில் அமைப்போம் என காங்கிரஸ் கட்சியினர் கூறி வருகிறார்கள். அவ்வாறு ஆட்சி அமைக்க முடியுமா என்பது தெரியவில்லை. அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.சண்முகத்தை சந்தித்ததில் வியப்பேதும் இல்லை. சென்னையில் இருந்து திருச்சி வரும் வழியில் அவர் வீட்டில் இருப்பதாக அறிந்து நேரில் சென்று சந்தித்தேன்.

கூட்டணி விவரங்களுக்கான பதில் வரும் டிசம்பர் மாதத்துக்குள் கிடைத்துவிடும். கூட்டணியை வைத்து மட்டும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். கடந்த 2001 ஆம் ஆண்டில் தி.மு.க. பலம் வாய்ந்த கூட்டணியை அமைத்திருந்தது. ஆனால், அ.தி.மு.கவே வென்றது. இதுபோல் 1980 தேர்தலில் தி.மு.க – காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. ஆனால் எம்.ஜி.ஆர். 2 ஆம் முறை வெற்றி பெற்றார்.

எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி தொடங்கப்பட உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு அங்கிருந்து தொடங்குகிறோம். தொடர்ந்து மதுரையில் இருந்து யாத்திரை நடைபெறுகிறது. அதில் பா.ஜ.க. தேசியத் தலைவர் நட்டா கலந்து கொள்கிறார்.

தி.மு.க. அரசு வேண்டாம் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டனர். பணம் கொடுத்தாலும் மிகப் பெரிய மாற்றம் வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். கூட்டணி மாறலாம் என கடம்பூர் ராஜு பேசவில்லை. மற்ற கட்சிகள் கூட்டணிக்கு வரலாம் என்று அவர் பேசியுள்ளார்.

டேவிட்சன் தேவாசீர்வாதம் சட்டம் – ஒழுங்கை கெடுத்து வருகிறார். மது, கஞ்சா, போன்ற போதை பழக்கங்களை அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓட்டு வங்கிக்கான அரசாங்கமாக தமிழக அரசு செயல்படுகிறது. விரைவில் இந்த அரசு வீழ்ந்துவிடும்.

நிரந்தர பணி வாய்ப்பு வழங்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டு அனைத்தும் ஒப்பந்த அடிப்படையில் மாறிவிட்டது. ஏமாற்றி ஓட்டு வாங்கிய அரசாக இந்த அரசு உள்ளது. தி.மு.கவை நம்பி காங்கிரஸ் கட்சி இருந்தால் இதைவிட மோசமான நிலைக்கு அக்கட்சி தள்ளப்படும். காங்கிரஸ் கட்சியிலிருந்து பலரை தி.மு.க. தங்கள் கட்சிக்கு இழுத்து வருகிறது.” – என்றார்.

# விஜய்க்கு சேரும் கூட்டத்தை சாதாரணமாக கருதக் கூடாது

## பெங்களூர் புகழேந்தி கருத்து



விஜய்யின் பின்னால் வரும் கூட்டத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என பெங்களூர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணனை, பெங்களூர் புகழேந்தி நேற்று சந்தித்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் வேலை எளிதாக மாறிவிட்டது. தி.மு.கவுக்கு, விஜய்யின் த.வெ.கவுடன் தான் போட்டி. அ.தி.மு.க. நான்காவது இடத்துக்கு சென்றுவிடும். சீமான் மூன்றாவது இடத்துக்கு வந்துவிடுவார். பா.ஜ.கவின் வலையத்துக்குள் தான் அ.தி.மு.க. இருக்கிறது. அ.தி.மு.கவை பா.ஜ.க. கைப்பற்றிவிட்டது.

அரசியலில் ஆதரவற்றவராக எடப்பாடி பழனிசாமி நிற்கின்றார். தமிழக தி.மு.க. ஆட்சி, திராவிட இயக்கத்தின் சுயமரியாதை, மாடல் ஆகியவற்றை காத்து, மத்திய அரசை எதிர்த்து நிற்பதாக இருக்கிறது. அதே நேரத்தில் எந்த நடவடிக்கையும் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் மீது எடுக்கவில்லை.

கொடநாடு, ஜெயலலிதா இறப்பு போன்றவைகளில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத குறைகள் எங்கள் கண்ணுக்கு தெரிகிறது. அதனை முதல்வர் சரி செய்துவிட்டு தேர்தலை சந்திக்க வேண்டும். நடிகர் ரஜினிகாந்த் சொன்னது போன்று ஜெயலலிதா இறந்தபிறகு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. அதனை யாராலும் ஈடு செய்ய முடியவில்லை. ஆகவே விஜய் இளைஞராக வருகின்றார். அவரது பின்னால் இளைஞர் பட்டாளம் நிற்கிறது. அதனை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. விஜய்யின் பின்னால் செல்லும் கூட்டம் ஓட்டுக்காக வந்த கூட்டம். அது மாறாது.

புதுச்சேரியில் முதல்வர் ரங்கசாமி தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுகிறது. எனவே அது தொடர வேண்டும்.”– என்றார்.

# தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாது!

## இப்படி புத்தசாசன அமைச்சர் கூறுகின்றார்

“யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை பதிவு செய்யப்பட வில்லை. காணியும் அரசால் சுவீகரிக்கப்படவில்லை. காணி குறித்து வெளிப்படைத்தன்மையுடன் ஆராயப்படுகின்றது. தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு உண்மை நோக்கத் துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை ஆராய வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த் துள்ளோம்.”

– இவ்வாறு புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலை கலாசாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடை பெற்ற அமர்வின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நிலையியற் கட்டளையின் 27.2 பிரகாரம் அண்மையில் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு, தையிட்டி பிரதேசத்தில் திஸ்ஸ விகாரை எனும் விகாரை ஒன்று உள்ளது. இந்த விகாரை பதிவு செய்யப்படவில்லை. இந்த விகாரை யின் காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றது.

இந்தப் பகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் போராட்டங்கள் குறித்து அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக ஏதும் அறிவிக் கப்படவில்லை. ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களே உள்ளன.

இந்த விகாரை அமையப் பெற்றுள்ள காணியானது காணி அமைச்சால் கைப்பற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. காணி அரசுடைமையாக்கல் சட்டத் தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத காரணத் தால் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லை.



இந்தக் காணி தொடர்பில் அமைச்சு மட்டத்தில் எவ்வித தீர்வும் எடுக்கப்படாத நிலையில், அடுத்த கட்ட நடவடிக் கைகளுக்குரிய தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இந்தக் காணி தமக்குரியது என்று போராடும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி எம்மை அழைத்து விரிவான கலந்துரையா டியுள்ளோர். யாழ் மாவட்ட சிவில் சமூகத்தினருடனும் கலந் துரையாடியுள்ளோம். தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டுக்கான அலுவலகத்தின் தலைவர் ரொஹான் பிரனாந்து வின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தையிட்டிப் பிரச்சினைக்கு ஒரு இடத்தில் மாத்திரம் தீர்வு காண முடியாது. புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு, காணி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் ஒன்றி ணைந்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு உண்மை நோக் கத்துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை ஆராய வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம்.” – என்றார்.



# வவுனியாவில் இராணுவத் தளபதியின் நிகழ்வில் ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு

(கி.வசந்தன்)

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த றொட்றிக்கோ வவுனியா கந்தசுவாமி ஆலயத்துக்கு நேற்று விஜ யம் செய்திருந்த நிலையில் அது தொடர் பாகச் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவிய லாளர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டிருந்தது.

இலங்கை இராணுவத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசீர்வாதம் பெற ஏற்பாடு செய்யப்பட்டு, மத அனுஷ்டான நிகழ்வுகள் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் நேற்று இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை இராணு வத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த றொட்ரிகோ கலந்துகொண்டிருந்தார். நிகழ்வைச் செய்தி சேகரிப்பதற்காக வவுனியா பிராந்திய ஊடகவியலாளர் கள் அங்கு சென்றிருந்தனர். இருப்பி னும் அவர்கள் செய்தி சேகரிப்பதற்கு இராணுவ அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தின் ஊடகப் பிரி வுக்கு மாத்திரம் செய்தி சேகரிப்பதற் கான அனுமதி வழங்கப்பட்டிருந் தது.









## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நாளில்

# வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இராணுவத் தளபதிக்கு செங்கம்பள வரவேற்புடன் ஆசி வேண்டிப் பிரார்த்தனை!

(வவுனியா நிருபர்)

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவு நாளில் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இராணுவத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு செங்கம்பள வரவேற்புடன் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசீர்வாதம் பெற ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு மத நிகழ்ச்சித் தொடர் நேற்று அனுராதபுரம் புனித ஜய ஸ்ரீமஹா போதியில் நடைபெற்ற மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பமாகியது.

இந்த மத நிகழ்ச்சி இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவின் தலைமையில் நடைபெற்றது.

ருவன்வெலி மகாசாய முன்பிருந்து ஆரம்பமாகிய இராணுவக் கொடிகளை ஏந்திய ஊர்வலம், ஜய ஸ்ரீமஹா போதிக்குச் சென்று அங்கு ஆசீர்வாதங்களைப் பெற்றது.

இந்த மதச் சடங்குகள் எட்டு வழிபாட்டுத் தலங்களுக்குமான (அடமஸ்தந்திபதி) பிரதம தேரர் அதி வண. கலாநிதி பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரரின் தலைமையில் நடைபெற்றன.

மேலும் இராணுவக் கொடிகளுக்கு ஆசீர்வாதம் பெறுவதற்காக வவுனியா ஸ்ரீகந்தசாமி கோவில் வளாகத்தில் இராணுவத் தளபதியின் தலைமையில் இந்து மதச் சடங்குகள் செய்யப்பட்டன.

பின்னர், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, போரினால் பாதிக்கப்பட்ட போர் வீரர்கள் சிகிச்சை பெறும் நல விடுதியான "அபிமன்சல 1" நல விடுதியை சிறப்பு விஜயம் மேற்கொண்டு அவர்களின் நலம் குறித்து விசாரித்தார்.

இராணுவத்தின் அனைத்து படையணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.













# வடமாகாண தொழில்துறை வர்த்தகச் சந்தை வவுனியா மாநகர சபை மைதானத்தில் இன்றும்

(கி.வசந்தன்)

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை இணைந்து நடத்தும் வடமாகாண தொழிலில் துறை வர்த்தக சந்தை வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.இ.சரத்சந்திர நிகழ்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இச்சந்தையில் உள்ளூர் உற்பத்திகள் உட்பட 50 ற்கும் மேற்ப்பட்ட விற்பனை கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன தொடர்ச்சியாக இன்றையய தினமும் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தொழில் துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், வவுனியா மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.















# வவுனியாவில் ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு

**(கி.வசந்தன்)**

சர்வதேச தற்கொலை தடுப்பு தின நிகழ்வுகளின் தொடர்ச்சியாக வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது தற்கொலை தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் செய்தி அறிக்கையிடலில் பின்பற்ற வேண்டிய விடயம் தொடர்பாகவும் மனநல வைத்திய நிபுணர் மதுசி செனவிரத்தின மற்றும் வவுனியா பொது வைத்தியசாலை மனநல வைத்தியர் சி.சுதாகரன் ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மனநல வைத்திய அதிகாரி தி.வைதேகியின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்பு நிகழ்வில் வவுனியா மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# களுவாஞ்சிகுடியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு





**(வ.சக்திவேல்)**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடி திருமுருகள் வீதியில் அமைந்துள்ள பற்றைக்குள் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தானர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்த இடத்திற்குச் சென்ற பொலிஸெ சடலத்தைப் பார்வையிட்டுள்ளனர். இந்நிலையில் களுவாஞ்சிகுடி நீதிபதி ரி.பிரதீபனுடைய உத்தரவுக்கமைய சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவுக்கான திடீர்மரண விராணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கு மாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் களுவாஞ்சிகுடி திருமுருகன் கோயில் வீதியைச் சேரந்த 2 பிள்ளைகளின் தந்தையான 71 வயதுடைய கணபதிப்பிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# சிகிச்சை பெற்று வந்த இளைஞன் உயிரிழப்பு அக்கரப்பத்தனை மருத்துவமனையில் குழப்பம்

(க.கிஷாந்தன், பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையையடுத்து, அவருக்கு முறையாக சிகிச்சையளிக்கப்படாததாலேயே அவர் உயிரிழந்தார் எனப் பிரதேச மக்கள் சிலர் குற்றஞ்சாட்டினர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகல தோட்டம் மேல் பிரிவை 37 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை சந்திரகுமார் ர் கடந்த 23 ஆம் திகதி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுத்துக் கொண்டு வீடு சென்றுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் நெஞ்சு வருத்த நோயின் நிலை தீவிரமாகியுள்ளது. இதனையடுத்து அவரை அவரது உறவினர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வந்துள்ளனர். அவரை பரிசோதித்த வைத்தியர், தங்கி இருந்து சிகிச்சைப் பெறுமாறு அறிவுறுத்தி இருந்தார்.

இதன்படி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபருக்கு வைத்தியர்களால் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. மாலை வேளையிலும் வைத்தியர்கள் பரிசோதனை செய்துள்ளனர். அதன் பின் மருந்துகள் வைத்தியசாலை தாதியர்களால் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் மாலை 7.45 மணியளவில் சம்ப்ந்தப்பட்ட நபர் இறந்துள்ளார்.

இதனையடுத்தே பிரதேச மக்கள் சிலர் வைத்தியசாலைக்குள் நுழைந்து, முறையாக சிகிச்சையளிக்கப்படாததாலேயே அவர் உயிரிழந்தார் எனக் குற்றம் சுமத்தி ஆக்ரோஷமாக நடந்துகொண்டுள்ளனர். அதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

இறந்தவரின் சடலத்தை வைத்திய சாலையில் இருந்து பிரேத அறைக்குக் கொண்டு செல்ல வேண்டாம் எனத் தெரிவித்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

பொதுமக்களைப் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்த போதிலும் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

நேற்றுக் காலை 150க்கும் மேற்பட்ட மக்கள் வைத்தியசாலையில் ஒன்று கூடி இறந்தவருக்கு நீதி வேண்டுமெனக் குறிப்பிட்டு, இறந்தவரின் உடலைக் கொண்டு செல்ல முடியாதெனத் தெரிவித்தனர். இதனை அடுத்து பொலிஸார் எடுத்த முயற்சியால் பல மணி நேரத்திற்கு பின்பு சடலம் பொலிஸ் பாதுகாப்புடன் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, தாம் அந்த நபருக்கு சரியான முறையில் சிகிச்சை வழங்கினர் எனவும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது பரிசோதனை செய்ததோடு, மாலை வேலையிலும் பரிசோதனை மேற்கொண்டு அவருக்கான மருந்துகளை வழங்குமாறு தாதியர்களை வழிப்படுத்தினர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தாதியர்களால் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவர் மாரடைப்பு காரணமாகவே இறந்தார் என வைத்தியசாலை வைத்தியர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இருந்தபோதிலும் வைத்தியசாலையில் உள்ள வைத்தியர்கள், ஊழியர்களை இடமற்றம் செய்யுமாறு தெரிவித்து பொதுமக்களிடமிருந்து கையொப்பம் பெற்று அக்கரப்பத்தனை பிரதேச சபை உப தவிசாளரிடம் சம்பந்தப்பட்டோர் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.






# சுற்றுலா தினம் - 2025 இலங்கை எங்கு நிற்கிறது?



மதுஷாயினி மதிவதனன், ஊடக கற்கைகள் துறை, யாழ். பல்கலைக் கழகம்.

ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 27 அன்று உலக நாடுகள் ஒன்று கூடி உலக சுற்றுலா தினத்தைக் கொண்டாடுகின்றன. இது வெறும் ஒரு தினக் கொண்டாட்டம் அல்ல, உலக நாடுகளின் பொருளாதாரம், பண்பாடு மற்றும் சுற்றுச் சூழல் ஆகியவற்றை இணைக்கும் பாலமாகச் சுற்றுலாத் துறையைப் பார்வையிடும் வாய்ப்பாகும். 2025 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் சுற்றுலாவும் பசுமை முதலீடுகளும் ஒன்றிணைந்து செல்லுல் அவசியத்தை குறிக்கின்றது. சுற்றுலா என்பது வெறும் பயணம் மட்டுமல்ல. இது ஒரு நாட்டின் முகவரியாகவும் மக்களின் வாழ்வாதாரமாகவும் மீளுருவாக்கத்தின் தளமாகவும் மாறும் என நமக்குப் புரியவைக்கும். இந்த நிலையில் இலங்கை தனது பண்பாட்டுச் செழுமையால் மட்டுமன்றி இயற்கை அழகாலும் வரலாற்றுப் பாரம்பரியத்தாலும் உலக சுற்றுலா வரைபடத்தில் மறுபடியும் திகழ முயல்கின்றது. இன்று இலங்கையின் சுற்றுலாத்துறையின் நிலை, எதிர்கால பாதைகள் மற்றும் பசுமையான முன்னேற்ற வாய்ப்புகள் குறித்துச் சிந்திக்க வேண்டிய நேரம் இது.

இலங்கை நறுமணக் காற்றில் மூழ்கும் பசுமைத் தீவாகும். வரலாறும் வசந்தமும் இயற்கையின் நறுமணமும், பண்பாட்டின் பெருமையும் கலந்த இந்த சிறிய தீவு நீண்ட காலமாகவே உலக சுற்றுலா வரைபடத் தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. பசுமையான மலைகள், நந்தவனமென விரிந்த தேயிலைத் தோட்டங்கள், உலக பாரம்பரியக் களங்களாக அறிவிக்கப்பட்ட கோவில்கள், கோட்டைகள், மற்றும் கடற்கரை அழகுகள் என்று சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தன்மையை கொண்ட நாடாகும்.

சிகிரியா, அநுராதபுரத்தின் புனித தரிசனங்கள், யால தேசிய வனவிலங்குப் பூங்கா, நுவரெலியாவின் இளமை உணர்வு தரும் பனிக் காற்று, கண்டி நகரத்தின் கலாச்சார பெருமை உள்ளிட்டவை ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றன. பல்வேறு துறைகளில் வளம் வாய்ந்த இந்த நாடு கொரோனாவுக்குப் பிந்தைய சூழலில் மீண்டும் தன் சுற்றுலாத் துறையை உயிர்ப்பிக்க முக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த நாளை முன்னிட்டு இயற்கை வளங்களால் நிகரற்றதொரு சுற்றுலா இலக்காக விளங்கும் இலங்கையின் தற்போதைய நிலை, வளர்ச்சிப் பாதை மற்றும் எதிர்கால நோக்கங்களை ஆராய்வது முக்கியமானதாகும்.

இலங்கைத் தீவானது அதன் கவர் ச்சியான இயல்பு, சூடான காலநிலை, வண்ணமயமான கலாச்சாரம் மற்றும் அற்புதமான உணவு ஆகியவற்றால் உலகெங்கிலும் உள்ள பயணிகளை நீண்ட காலமாகக் கவர்ந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கான மலிவான இடங்களில் ஒன்றாகத் தொடர்ந்து தரவரிசைப் படுத்தப்படுகின்றது.

**2025 இல் இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சி**

2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியனை எட்டியுள்ளது. இது நாட்டின் சுற்றுலாத்துறை மீண்டும் வலுவான வளர்ச்சிப் பாதையில் இருப்பதையும் ஒரு முதன்மை பயண இடமாக இலங்கை வளர்ந்து வருவதையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த வளர்ச்சிக்கு உள்நாட்டுபோக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், வீசா நடைமுறைகளை இலகுபடுத்துதல் மற்றும் உலகளாவிய சந்தைப்படுத்தல் போன்ற பல திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டும் என்றஇலக்கைஅரசுநிர்ணயித்துள்ள நிலையில் இந்த ஆண்டு சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்பும் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்தத் துறையில் உள்ள நிபுணர்களின் திறன்களை வளர்ப்பதற்கும் பல திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2025 இல் முன்னேற்றங்களை ஒளிரச் செய்யும் முயற்சிகளை அரசு சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக, அரசு மற்றும் தனியார் துறைகளை ஒருங்கிணைத்து ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதுடன், அரச நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெறும் ஊக்குவிப்புத் திட்டங்களை மட்டும் சார்ந்திராமல், அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்புடன் ஒரு விரிவான மூலோபாயத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்துவதற்காக ஒரு சிறப்பு செயலணி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது சுற்றுலா துறையின் வளர்ச்சிக்குக் கவனம் செலுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவது இதன் முக்கிய நோக்கமாகும். 2025 ஜனவரி முதல் மே மாதம்வரை, இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச வழிகாட்டிகள் இலங்கையை 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்றுலாத் தளங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்துள்ளன. யாழ்ப்பாணம் போன்ற மாவட்ட அரச அதிபர்கள் தலைமையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களை மறு ஆய் வு செய்யும் கூட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2025 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக உலக சுற்றுலா தினம் தொடர்பான நிகழ்வுகள், சர்வதேச பயணக் கண்காட்சிகளில் பங்கேற்பு, இளைஞர்களை ஈடுபடுத்தும் போட்டிகள், மற்றும் சிறு வணிகங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன. சுற்றுலாத்துறையில் புதுமை, நிலைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பை மையப்படுத்தி, இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானத்தை அதிகரிப்பதும், மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொள்வதும் இந்த முயற்சிகளின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

செப்ரெம்பர் 1 . 2025 அன்று அனைத்து மாகாணங்களிலும் பள்ளி சுற்றுலா மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டன. சமையல் கலை, உணவு மற்றும் பான சேவை, விடுதி மேலாண்மை, மற்றும் சுற்றுலா அறிவு போன்ற பிரிவுகளில் மாணவர்களின் திறமைகளை இந்தப் போட்டிகள் வெளிக் கொணர்ந்தன. சர்வதேச பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களின் பங்கேற்புடன் நிலையான சுற்றுலா மாற்றங்கள் குறித்த ஆய்வு மாநாடும்,

தொடர்ச்சி▼

# சுற்றுலா தினம் - 2025 இலங்கை எங்கு நிற்கிறது?

தொடர்ச்சி▲

சுற்றுலாத் துறையின் எதிர்கால சவால்களை எதிர்கொள்வது குறித்த சர்வதேச சுற்றுலாத் தலைவர்கள் மாநாடும் நடைபெற்றது. ஜனவரி 2025 முதல், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் முக்கிய சர்வதேச பயணக் கண்காட்சி களில் பங்கேற்றது. இதன் மூலம் உள்ளூர் சுற் றுலாப் பங்குதாரர்களுடன் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், வணிக வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுவதற் காகச் சர்வதேச ஊடகங்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களை வரவேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய பிராண்டிங் பிரச்சா ரம் ஒன்று தொடங்கப்பட்டது. இது இலங்கையை உலகளவில் விரும்பப்படும் சுற்றுலாத் தளமாக நிலை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டி ருந்தது. சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உகந்த வணிக சூழலை மேம் படுத்துவதற்கும், விசா செயல்முறைகளை சீரமைப்பதற்கும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் உட்கட்ட மைப்புமேம்பாடுகளில் கவனம் செலுத்தப்பட் டது.

இலங்கையில் சுற்றுலாத்துறையில் நிலவும் சவால்கள் இலங்கையில் சுற்றுலாத் துறையா னது பொருளாதார ஸ்திரமின்மை, பாதுகாப்புக் கவலைகள், மோசமான உட்கட்டமைப்பு, போதிய ஊக்குவிப்பு இல்லாமை மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு உட்பட பல சவால்களை எதிர் கொள்கின் றது. இந்தப் பிரச்சினைகளும் அண்டை நாடுக ளின் போட்டியும் சேர்ந்து தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளன.

பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும் 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் கடனைக் குறைப்பதில் உள்ள சவால்கள் சுற்றுலாத்துறையில் தாக் கத்தை ஏற்படுத்தக்கூடும்.

உலகப் பொருளாதார மந்தநிலை மற்றும் உள்நாட்டு பணவீக்கம் காரணமாக மக்களின் செலவு செய்யும் சக்தி குறைந்து சுற்றுலாத் துறை யில் முதலீடும் பயணிகளின் எண்ணிக்கையும் குறையக்கூடும். இலங்கையின் சுற்றுலாத்து றைக்கு ஒரு ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் உத்தி மற்றும் வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும் திட்டமிடப்பட்ட முயற்சிகள் இல்லாதது ஒரு முக்கிய சவாலாகும். திறமையான மற்றும் பயிற்சி பெற்ற மனிதவளத்தின் பற்றாக்குறை சுற்றுலா சேவைக ளின் தரத்தைப் பாதிக்கிறது. சுற்றுலாத்துறை சார்ந்த உள்கட்டமைப்புகள் மற்றும் சர்வதேச இடங்களுடன் ஒப்பிடும்போது பின்தங்கியே காணப்படுகின்றன. இது சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தைப் பாதிக்கலாம். நாணய மாற்று வீதங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் வெளிநாட் டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு செலவை அதிக ரித்து, இலங்கையைக் குறைந்த கவர்ச்சிகரமான இடமாக மாற்றலாம். சுற்றுலாத் துறையில் சீரற்ற மற்றும் திட்டமிடப்படாத வளர்ச்சி, தேவையான ஒழுங்குமுறை மேற்பார் வையின்மை, மற்றும் தரமற்ற சேவைகள் போன்றவற்றின் பெருக்கத் துக்கு வழிவகுக்கலாம்.

முடிவாக, இலங்கை உலக சுற்றுலாவின் கண்களில் ஒளிரும் முத்தாகவே திகழ்கிறது. 2025 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படும் இந்தக் கட்டத்தில் இலங்கை சுற்றுலாத் துறையின் மீளுருவாக்கமும், பசுமை வளர்ச்சிக்கான புதிய பாதைகளும், நாட்டின் பொரு ளாதாரத்துக்கும் சமூக மாற்றத்திற்கும் தூண்டு கோலாக அமைகின்றன. சரியான திட்டமிட லும் பொது தனியார் ஒத்துழைப்பும் சுற்றுச் சூழலுக்கு உகந்த முதலீடுகளும் இணைந்தால் இலங்கை மீண்டும் உலக சுற்றுலா வரைபடத் தில் தன் இடத்தை வலுவாக நிலைநிறுத்தும் என்பது உறுதியானதாகும்.

# சத்திர சிகிச்சை மேற்கொண்ட பின்னர் ஒரு பிள்ளையின் தாய் உயிரிழப்பு

வயிற்றுக் குத்துக்கு அறுவைச்சி கிச்சை செய்த நிலையில் கழிவுகள் வெளியேற்ற வைத்த குழாயை அகற்றிய நிலையில் ஒரு பிள்ளையின் தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் டச்சு வீதி, உடுவில் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான நிறுன் தர்சிகா (வயது 29) என்பவராவார்.

கடந்த மே மாதம் 19ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் வயிற்றுக் குற்றுக்கு அறுவைச்சிகிச்சை செய்த நிலையில் கழிவுகள் வெளியேற்ற வைத்த குழாயை அகற்ற மீண்டும் சத்திர சிகிச்சைமேற்கொண்டதன்பின்னர்நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறு முகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் இரத்த நாளங்களுக்குள் மேலதிக இரத்த உறைவு ஏற்பட்டு இரத்தப் போக்கால் மரணம் சம்பவித்ததாக அறிக்கை யிடப்பட்டுள்ளது.

# தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் நான்கு மாத குழந்தை உயிரிழப்பு

தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் உடற் சோர்வு அடைந்த நான்கு மாத பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை தொம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னா கத்தைச் சேர்ந்த சஜித்தீபன் கிசாரா என்ற குழந்தையாகும்.

கடந்த புதன்கிழமைநான்காம் மாத தடுப்பூசி ஏற்றியதன் பின்னர் குழந்தை உடற்சோர்வு அடைந்ததால் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுள்ளனர்.

உடல்நிலைசீரடையாமையால்நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை 1.15 மணியளவில் யாழ். போதனா வைத்தி யசாலைக்கு கொண்டு சென்ற போது சிறிது நேரத்தில் குழந்தை உயிரிழந் துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறு முகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

இறப்புக்கான காரணம் கண்டறிய உடற்கூற்று மாதிரிகள் இரசாயன பகுப் பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



# பயணங்கள் தரும் புது உலகம்...!

இ.அபினகா,
3 ஆம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய செப்ரெம்பர் 27 ஆம் திகதி என்பது வெறும் ஒரு நாள் அல்ல. மனித குலத்தின் பன்முகத்தன்மையையும், கலாச்சாரங்களின் அழகையும் கொண்டாடும் உலக சுற்றுலா தினம் ஆகும். இன்றைய உலக சுற்றுலா தினத்தின் (செப்ரெம்பர் 27, 2025) கருப்பொருள் “சுற்றுலா மற்றும் நிலையான மாற்றம்” (Tourism and Sustainable Transformation) ஆகும். இது சுற்றுலாவை ஒரு பொருளாதார செயல்பாடு மட்டுமல்லாமல்நேர்மறையானமாற்றத்தைகொண்டு வரும் சக்தி வாய்ந்த கருவியாகவும் பார்க்கிறது. நிலையான வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் புதுமை ஆகியவற்றை வலியுறுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். உலக சுற்றுலா நிறுவனத்தின் ஆதரவில் செப்ரெம்பர் 27ஆம் நாளில் 1980 ஆம் ஆண்டில் இருந்து உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

1979 ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா நிறுவனத்தின் மூன்றாவது பொது அவைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. உலகம் ஒரு சிறிய கிராமமாக மாறிவிட்ட இந்தக் காலகட்டத்தில் சுற்றுலா என்பது வெறும் பொழுது போக்கு மட்டுமல்ல அது ஒரு புதிய உலகத்தைத் திறக்கும் திறவுகோலாகும். அன்றாட வாழ்க்கையின் சோர்வில் இருந்து விடுபட்டு புதிய இடங்களை ஆராய்வதற்கும், புதிய மனிதர்களைச் சந்திப்பதற்கும், உலகை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பாக மாறியுள்ள இந்த நாளில், உங்கள் பயணப் பையை எடுத்துக் கொண்டு இதுவரை நீங்கள் காணாத உலகை நோக்கி ஒரு அடியை எடுத்துச் செல்லுங்கள்.

உலகின் மிகப்பெரிய துறையாக விளைவது சுற்றுலாத்துறைதான். 2010 ஆம் ஆண்டின் கணக்குப்படி 940 மில்லி சர்வதேச சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை பல உலகநாடுகளின் முக்கிய தொழில்துறையாக உள்ளது. சுற்றுலா என்பது வெறும் இடங்களைப் பார்ப்பது மட்டுமல்ல அது புதிய அனுபவங்களைப் பெறுவது, நம்மைப் பற்றி அதிகம் அறிந்துகொள்வது மற்றும் நம் எல்லைகளை விரிவுபடுத்துவதாகும். நீங்கள் பயணிக்கும் போது நீங்கள் வரலாற்றையும் நேரில் காண்கிறீர்கள். ஒவ்வொரு நினைவுச் சின்னமும், ஒவ்வொரு கட்டடமும் சொல்லும் கதைகளைக் கேட்கிறீர்கள். ஒரு புதிய கலாச்சாரத்தின் உணவு வகைகளைச் சுவைக்கும்போது, அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்கிறீர்கள். ஒரு புதிய மொழியின் சில வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளும்போது, ஒரு புதிய உலகில் நுழைகிறீர்கள். பயணங்கள் என்பது அறிவை மட்டும் வளர்ப்பதில்லை, நம் உள்ளத்தையும் விரிவுபடுத்துகின்றன. அது நம் மனதின் தடைகளை உடைத்து நாம் அனைவரும் ஒரே உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வை நமக்குத் தருகிறன.

அழகு நம் வீட்டருகிலும், நம் நாட்டிலும் தான் இருக்கிறது. உலக சுற்றுலா தினத்தில் நாம் ஏன் நம் நாட்டின் பாரம்பரியத்தையும், இயற்கையையும் கொண்டாடக் கூடாது? இந்தியாவின் பன்முகத் தன்மை, அதன் பிரமிக்க வைக்கும் மலைகள், பரந்து விரிந்த கடற்கரைகள், வரலாறு பேசும் கோட்டைகள், அமைதியான கோவில்கள் மற்றும்துடிப்பானநகரங்கள்எனஎண்ணற்ற அதிசயங்களைக் கொண்டுள்ளது. ஒரு குறுகிய பயணம் கூட உங்கள் மனதுக்கு புத்துணர்ச்சி அளித்து, புதிய சக்தியைத் தரக்கூடும். உள்நாட்டுச் சுற்றுலாவை ஆதரிப்பதன் மூலம், உள்ளூர் பொருளாதாரத்துக்கு நாம் பெரும் பங்களிக்கிறோம். கைவினைஞர்கள், சிறு வணிகர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இது உதவுகிறது. எனவே, உங்கள் அடுத்த பயணத்தை உங்கள் நாட்டுக்குள்ளேயே தொடங்கலாம்.

இன்று தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது பயணத்தை முன்பை விட எளிதாக அணுகக்கூடியதாக மாற்றியுள்ளது. அதாவது ஸ்மார்ட்ஃபோன் மூலம் ஒரு சில நிமிடங்களில் விமான டிக்கெட்டுகள், ஹோட்டல் அறைகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளை முன்பதிவு செய்யலாம். ஆன்லைன் வரைபடங்கள் மற்றும் மொழிபெயர்ப்பு செயலிகள் புதிய இடங்களில் தொலைந்து போவதற்கான பயத்தைக் குறைத்துள்ளன. இன்று சமூக ஊடகங்கள் புதிய இடங்களைக் கண்டறியவும், நண்பர்களுடன் பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்றன. இந்த தொழில்நுட்பங்கள் பயண அனுபவத்தை மேலும் எளிமையாக்கி அதிக மக்களை உலகைச் சுற்றி வர ஊக்குவிக்கின்றன. இவ்வாறான வசதிகளைப் பயன்படுத்தி உங்கள் கனவுப் பயணத்தை திட்டமிடுவது இப்போது மிக எளிதாக மாறியுள்ளது. எனினும், ஒரு பொறுப்பான சுற்றுலாப் பயணியாக இருப்பது மிக அவசியம். ஒரு சுற்றுலாப் பயணி, ஒரு இடத்தின் கலாச்சாரத்தையும், இயற்கையையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும். சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பது, உள்ளூர் மக்களின் கலாச்சாரத்துக்கு மதிப்பளிப்பது, மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பது போன்றவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். பொறுப்பான சுற்றுலா, நாம் பயணிக்கும் இடங்களுக்கு மட்டுமல்ல, எதிர்கால சந்ததியினருக்கும் உதவுகிறது. நாம் பார்க்கும் ஒவ்வொரு இடத்தையும், அதன் அசல் தன்மையுடன் எதிர்கால தலைமுறையினருக்காக விட்டுச்செல்ல வேண்டும்.

பயணங்கள் வெறும் இட மாற்றங்கள் அல்ல, அவை நம் வாழ்க்கையை மாற்றும் அனுபவங்கள் என்பதை நினைவில் கொள்வோம். ஒரு புதிய பயணத்தைத் தொடங்குவதன் மூலம் நீங்கள் ஒரு புதிய நண்பரைக் காணலாம். ஒரு புதிய உணர்வை உணர்ந்து கொள்ளலாம். உங்கள் கனவுகளைப் பின்தொடர்ந்து இதுவரை நீங்கள் பார்க்காத உலகைக் கண்டறியுங்கள். பயணங்கள் உங்கள் கதைகளை நிறைவு செய்கின்றன, உங்கள் நினைவுகளைச் செழுமைப்படுத்துகின்றன. உலக சுற்றுலா தினம் கொண்டாடும் இத்தகைய தருணத்தில், உங்கள் அடுத்த பயணத்துக்கான திட்டங்களைத் தொடங்க உங்களை அழைக்கிறோம். ஏனெனில் உலகைக் கண்டறிய நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியும் உங்களைக் கண்டறிய நீங்கள் எடுக்கும் ஒரு அடியாகும்.

# இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் விக்சித் பாரத் ஓட்டம் நாளை

இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம் விக்சித் பாரத் ஓட்டம் - 2025 இனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பணம் நாளை 28 செப்டம்பர் 2025 காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் தொடங்கி, விக்சித் பாரத் ஓட்டம் 2025 நிகழ்வை நடத்த இருக்கிறது. யாழ்ப்பாணத்தின் முக்கியச் சின்னங்கள் ஊடாக நடைபெறும் இந்த ஓட்டம், இந்திய வம்சாவளியினரும், உள்ளூர் சமூகத்தினரும், இந்தியாவின் நண்பர்களும் ஒன்றிணைந்து உடற் பயிற்சி, சேவை மற்றும் கூட்டு பொறுப்புணர்வை கொண்டாடும் நிகழ்வாக அமையும்.

உலகளாவிய அளவில் 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ள விக்சித் பாரத் ஓட்டம் 2025, இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும். இந்தியாவின் முன்னேற்றத்தையும் பண்பாட்டு மதிப்புகளையும் வெளிப்படுத்தும் இந்நிகழ்ச்சி, சமூகக் குழுக்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இந்தியாவின் நண்பர்களையும் இளைஞர்களையும் இணைத்து, 'உலகமே ஒரே குடும்பம்' என்ற வசுதைவ குடும்பகம் என்ற உணர்வை வலுப்படுத்தும்.

லண்டன் மற்றும் பாரிஸிலிருந்து நியூயார்க், மாஸ்கோ, சிட்னி மற்றும் யாழ்ப்பாணம் வரை, சமூகங்கள் ஒன்றிணைந்து, தமது பாரம்பரியத்தில் பெருமை கொள்வதோடு, இந்தியாவின் விக்சித் பாரத் பயணத்தில் தாம் வகிக்கும் பங்கை மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில், சிறப்புப் பிரமுகர்களும் உள்ளூர் தலைவர்களும் பங்கேற்க உள்ளனர். இதன் மூலம் இந்தியாவின் முன்னேற்றக் கதையை உலகுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தையும், மக்களுடனான உறவுகளை வலுப்படுத்துவதையும் வலியுறுத்தும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் அனைத்து உறுப்பினர்களையும் இந்த தனித்துவமான நிகழ்வில் பங்கேற்க அழைக்கிறது. ஓட்டத்தில் இணைவதன் மூலம், பங்கேற்பாளர்கள் உடற்பயிற்சி மற்றும் கலாச்சார பங்கேற்பைக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், நல்லெண்ணம், ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட நோக்கத்தின் வலுவான பிணைப்புகளை உருவாக்குவதற்கும் பங்களிக்க முடியும்.



# திலீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான் நாடாளுமன்றத்தில் அஞ்சலித்து ரவிகரன் உரை!

(பா.சதீசன்)

தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லையெனவும், எனவே பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான் எனவுன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று உரையாற்றும்போது தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஈழத்தமிழர்களின் உரிமைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைவழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு இந்த உயரிய சபையில் முதற்கண் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.




இராசையா பார்த்தீபன் என்னும் இயற்பெயரைக்கொண்ட தியாகச்செம்மல் திலீபன் அவர்கள் தமிழர்களின் உரிமைக்காக தனது இன்னுயிரைத் துறந்து 38வருடங்கள் ஆகியுள்ளன.

ஆனாலும் ஈழத்தமிழர்கள் தற்போதும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலே தமிழர் தாயகப்பரப்பில் வாழ்ந்துவருகின்றனர். தமிழர் தாயகப்பரப்பில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகப் பரப்பில் அதிகரித்த இராணுவமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

எனவே தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை. அந்த வகையிலே பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான் என்பதை இவ்வுயரியசபையிலே பதிவுசெய்து கொள்ள விரும்புகின்றேன் – என்றார்.

# யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தினரின் மாதாந்தத் திரையிடல் ஞாயிற்றுக்கிழமை



யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் மாதாந்தத் திரையிடல் நிகழ்வு நாளை 28.09.2025 ஞாயிறு அன்று மாலை 4.00 மணிக்கு, 18ஃ2., அம்மன் வீதி (பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனை அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில்“ நடைபெறும்.

அன்று, புகழ்பெற்ற மலையாளத் திரைப்பட நெறியாளரான அடூர் கோபால கிருஷ்ணனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட, ‘கதாபுருஷன்’ என்ற திரைப்படம் திரையிடப்படுகிறது.

இத் திரைப்படமானது 1996 ஆம் ஆண்டில் சிறந்த திரைப்படத்துக்கான இந்தியத் தேசிய விருதைப் பெற்றுள்ளது.

ஆங்கிலத் துணைத் தலைப்புகளைக் கொண்ட இத்திரைப்படம் இலவசமாகக் காண்பிக்கப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது



# வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகள் குறித்து மேயருடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி ஆராய்வு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மேயருக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியினருக்குமிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபன் அவர்களின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தவபாலன் மற்றும் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர்.

இச் சந்திப்பில் சமகால அரசியல் விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், வவுனியா மாநகரசபையின் செயற்பாடுகள் மறறும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.





# வவுனியாவில் 11 முதிரைக் குற்றிகளுடன் விபத்திற்குள்ளான வாகனம்; சாரதி மாயம்




(கி.வசந்தன்)

வவுனியா, புதுக்குளம் பகுதிக்கு அருகாமையில் முதிரைக் குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று விபத்திற்குள்ளான நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, இரணை இலுப்பங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த போது அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் இந்த வாகனம் வழிமறிக்கப்பட்டுள்ளது. எனினும் அது நிறுத்தாமல் சென்றதாகப் பொலிஸெ தெரிவித்தனர்.

இந்நிலையில் புதுக்குளத்திற்கு அண்மித்த பகுதியில் விபத்திற்குள்ளான நிலையில் பொலிஸாரால் அவ் வாகனம் மீட்கப்பட்டது. வாகனத்தில் இருந்த 11 முதிரைக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

வாகனத்தின் சாரதி மாயமாகியுள்ள நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# மஸ்கெலியாவில் கடுமையான மழை

(மஸ்கெலியா செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் கனத்த மழை பெய்தது வருகிறது.

இதன் காரணமாக பெருந்தோட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் இப் பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் வருகை மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டது.

தொடர்ந்து கன மழையுடன் எங்கு பார்த்தாலும் பனி மூட்டம் காணப் படுகிறது.

இதன் காரணமாக வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது பெய்து வரும் மழையால் வீதி ஓரங்களில் உள்ள மண் திட்டுகள் சரிந்து விழும் அபாயம் உள்ளதால் மக்கள், பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா இராஜ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட கம்பளை தம்பதி நாவலப்பிட்டியவில் கைது!



(க.கிஷாந்தன்)

மிகவும் சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த தம்பதியினர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நாவலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஈசி காஷ் முறைமையில் பயணத்தை பெற்றுக்கொண்டு கம்பளை, நாவலப்பிட்டிய உள்ளிட்ட பகுதிகளுக்கு இத்தம்பதியினர் போதைப்பொருள் விநியோகம் செய்கின்றனர் எனப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய நாவலப்பிட்டிய – தொலஸ்பாகை வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு அருகில் ஐஸ் பக்கெட்டை வைக்க முயன்றவேளை நாவலப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர், சந்தேக நபர்களை கைது செய்தனர்.

அவர்களை பரிசோசித்தபோது 52 ஐஸ் பக்கெட்டுகள் மீட்கப்பட்டன. ஒரு பக்கெட் ஐஸ் போதைப்பொருள் 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட 23 மற்றும் 27 வயதுடைய தம்பதியினர் கம்பளை, கீரபனை பகுதியை சேர்ந்தவர்களெனத் தெரியவந்துள்ளது.

டுபாய் தாரு என்ற போதைப்பொருள் வியாபாரியிடம் இருந்து போதைப்பொருள் வாங்கியே இவர்கள் ஈஸிகஷ் முறையில் விற்றுவந்துள்ளனர்.

சந்தேக நபர்களை நேற்றே நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலதிக பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

# மன்னார் மக்களை எதிர்த்துக்கொண்டு அடாவடியாக காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டாம்!



**(விஜயரத்தினம் சரவணன்)**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னார் மாவட்ட மக்களை எதிர்த்துக்கொண்டு அடாவடித்தனமாக காற்றாலை மின்உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்கக் கூடாதென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே மன்னார் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மன்னார் காற்றாலைமின் உற்பத்தி திட்டத்தினை நிறுத்துமாறு இந்த உயரிய சபையைக் கோருகின்றேன்.

மன்னார்த் தீவில் மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பதை நிறுத்தக் கோரி மன்னார் மக்கள் இன்றுடன் 55ஆவது நாளாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மக்களின் எதிர்ப்பினால் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அரசாங்கம் மக்களின் விருப்பத்திற்கு மாறாக மீள முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

அந்த வகையில் மன்னார்தீவினுள் சவுத்பார், தாழ்வுபாடு மற்றும் கொன்னையன் குடியிருப்புத் தொடக்கம் நடுக்குடாவரையான பகுதிகளிலுமாக 20மெகாவோட் மற்றும் 50மெகாவோட் கொள்திறன்களைக்கொண்ட மொத்தம் 14 காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை மக்களின் விருப்பிற்கு மாறாக நிறுவுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

குறிப்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலான குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து இந்தக் காற்றாலைத் திட்டம் மன்னார் தீவில் முன்னெடுக்கப்படக் கூடாதெனக் கோரியிருந்தோம். இந்நிலையில் குறித்த காற்றாலைத் திட்டம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதெனவும், அதுவரை காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த 05.09. 2025அன்று மன்னார்த் தீவிலுள்ள சாந்திபுரம், தாழ்வுபாடு, தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், பேசாலை ஆகிய பகுதிகளில் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மக்களுக்கு காற்றாலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அனைத்து இடங்களிலும் மக்களால் காற்றாலைத் திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அதிலும் குறிப்பாகப் பேசாலையில் கூட்டத்தைநடாத்த முடியாத அளவில் மக்கள் மிகவும் கடுமையாகத் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தமையை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இதனைத்தொடர்ந்து இம்மாதம் 19ஆம் திகதி மன்னார் மாவட்ட மக்கள் பெருமளவில் ஒன்று திரண்டு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்த்சி மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் மக்கள் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் மன்னார்த் தீவினுள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பதையே எதிர்க்கின்றனர்.

குறிப்பாக 32 கிலோ மீற்றர் நீளமும், 04 கிலோ மீற்றர் வரையான அகலமுடைய குறைந்தளவு நிலப்பரப்பினைக்கொண்ட மன்னார்தீவில் ஏற்கனவே 30 காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேலதிகமாக காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் மன்னார்த் தீவினுள் மக்கள் வாழமுடியாதநிலை ஏற்படும் என்பது அந்த மக்களின் கருத்தாகவுள்ளது.

இது தவிர வங்காலை, நறுவிலிக்குளம் ஆகிய இடங்களில் 06 காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளமையுடன், மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 36காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

எனவே நாட்டின் பொருளாதாரத்திற்கும், நாட்டின் மின்சாரத் தேவைக்கும், மீள் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான இலக்கினை அடைவதற்கும் ஏற்கனவே பங்களிப்பினை நல்கியுள்ளதாக அந்த மக்கள் கருதுகின்றனர்.

இத்தகைய காரணங்களுக்காகவே மன்னார்த் தீவினுள் காற்றாலைதத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு மக்கள் எதிர்க்கின்றனர்.

இத்தகைய சூழலில் மன்னாரில் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்தக் காற்றாலைத் திட்டத்தினை உடனடியாக மீள முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் வலுசக்திஅமைச்சினையும், மன்னார் மாவட்ட செயலகத்தையும் அறிவுறுத்தியுள்ளார் என அறியக் கிடைக்கின்றது. எனவே மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்ற, மக்கள் ஏற்றுக்கொள்ளாத இத்திட்டத்தினை, மக்களின் விருப்பத்திற்குமாறாக அடாவடித்தனமாக வலிந்து ஏற்படுத்த முனைவது பொருத்தமற்ற செயற்பாடாகும். ஆகவே மக்கள் ஏற்றுக்கொள்ளாத இக் காற்றாலைத் திட்டத்தினை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு இந்த உயரியசபையின் ஊடாக உரியவர்களைக் கோருகின்றேன்.

மேலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னார் மாவட்ட மக்களை எதிர்த்துக்கொண்டு இந்த காற்றாலைத் திட்டத்தை செயற்படுத்தவேண்டாமெனவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.



# திருகோணமலையில் தியாகி திலீபனின் நினைவஞ்சலி



தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை, சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து பொதுச் சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நினைப் பேருரைகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து தியாக தீபம் திலீபனுக்கான அஞ்சலியை செலுத்தினர்.









# மட்டக்களப்பில் திலீபனின் நினைவேந்தல்

(வ.சக்திவேல்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவடிவேம்பு சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் தாயக செயலணியின் அனுசரணையில், மாவடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் ஆ.பிரிநட் குணபாலனின் தலைமையில் நடைபெற்றது.

தியாக தீபம் தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், மாவீரர் சிறிநந்தியின் தாயாரான நல்லரெட்ணம் பவளமலரால் இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திலீபனின் உருவப்படத்திற்கு முன்னாள் போராளி ஒருவர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் பலரும் உணர்வு பூர்வமாக அஞ்சலியில் கலந்து கொண்டனர்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஶ்ரீநாத், ஏறாவூர்ப் பற்று பிரதேச சபை தவிசாளர் மு.முரளிதரன், பிரதேச சபை உறுப்பினர்கள், தாயக செயலணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# லண்டனில் தியாக தீபத்தின் நினைவேந்தல்

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் லண்டனில் நேற்று நடைபெற்றது.










# பருத்தித்துறை சுப்பர்மடத்தில் திலீபனின் நினைவேந்தல்

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் விசேடமாக பந்தல் அமைக்கப்பட்டு கடந்த 12 நாள்களாக அஞ்சலி செலுத்தப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் இறுதி நாள் நிகழ்வுகள் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பலரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.














# கல்முனை பொதுச் சந்தைக்கான மின் விநியோகம் மின் கட்டணம் செலுத்தப்படாமையால் துண்டிப்பு!

## எனினும் அடுத்த நாள் நேற்று சீரமைக்கப்பட்டதாகத் தகவல்

(பாறுக் ஷிஹான்)

மின்சார கட்டணம் உரிய முறையில் செலுத்தப்படாமை காரணமாக கல்முனை மாநகரில் உள்ள பொதுச் சந்தைக்கான மின் விநியோகம் இலங்கை மின்சார சபையினால் கடந்த வியாழக் கிழமை துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்றுக் காலை வரை வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கமும் இத்தகவலை உறுதிப்படுத்தியது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு விடயத்தைத் தாங்கள் கொண்டு வந்துள்ளனர் எனவும் உரிய மின்சார நிலுவை கொடுப்பனவு தற்போது செலுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் மின்சார சபையினர் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை சீரமைத்து மீள வழங்க உள்ளனர் என்றும் நேற்று முற்பகல் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் கீழ் உள்ள இந்தப் பொதுச் சந்தைக்கான மின்சாரக் கட்டணத்த செலுத்தும் உத்தியோகத்தர் உரிய காலத்தில் நிதியை செலுத்த தவறிய காரணத்தால் இவ்வாறு மின்துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தனக்குத் தொலைபேசி ஊடாக நிலைமையை அறியத் தந்தார் என கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல். கபீர் தெரிவித்தார்.

எனினும் இலங்கையின் மிகப்பெரிய சந்தைகளில் ஒன்றான கல்முனை மாநகர பொதுச் சந்தை வியாழக்கிழமை இரவு இருளில் மூழ்கிக் கிடந்தது.

வருடாந்தம் பல கோடி ரூபா வருமானத்தை பெறுகின்ற இவ்வாறான சந்தை தொகுதியின் மின்சார கட்டணம் உரிய முறையில் செலுத்தப்படாமை குறித்து பல தரப்பினரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.





# சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்பு பிரிவு ஈச்சங்குளத்தில் நேற்று திறந்துவைக்கப்பட்டது

(கி.வசந்தன்)

வவுனியா, ஈச்சங்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்பு பிரிவு மற்றும் பொலிஸாருக்கான உணவகம் என்பன வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் சீ.ஏ.தனபாலவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களது முறைப்பாடுகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு பொலிஸாரின் சேவையை விஸ்தரிக்கும் பொருட்டு இந்தப் பிரிவு புதிதாக இந்தப் பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்தன விஜயமுனி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




















# ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றச் சிறைக்கூடத்தில் ஆண் கைதி ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலை!

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் சிறைக்கூடத்தில் 40 வயதுடைய ஆண் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மிச் நகர பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான வாச்சுக்குட்டி நெவ்பர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

இந்த நபரை கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஏறாவூர் பொலிசார் கைது செய்து 22 ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை இன்று 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று அவர் சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு திறந்த நீதிமன்ற சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டார்.

திறந்த நீதிமன்ற நடவடிக்கை பதில் நீதவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் இவர் காலை 11.50 மணியளவில் சிறைக்கூடத்தில் உள்ள மலசல கூடத்திற்கு சென்று ஜன்னல் கம்பியில் தனது சாரத்தை கழற்றி கழுத்தில் மாட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இதனையடுத்து தடவியல் பிரிவு பொலிஸ் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். நீதிவானின் அனுமதி பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்தனர்.

இதேவேளை இந்த நபருக்கு எதிராக திருட்டுக்கள் தொடர்பாக இரண்டு வழக்குகளும், போதை பொருள் தொடர்பாக இரண்டு வழக்குகளும் என மொத்தம் 4 வழக்குகள் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது



# இன்றைய ராசி பலன்கள் -27.09.2025




இன்று உங்கள் விருப்பத்திற்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்கள் திடமான மனது மற்றும் உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதட்டபடாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.

உங்கள் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துங்கள். ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பல வீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மாற்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.எனவே இருக்கும் பணத்தைக் கொண்டுநிர்வகிக்கஉங்களைதயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் அல்லது தொடை வலி ஏற்படலாம்.ஆரோக்கியமாய் இருக்க தியயானம் மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -27.09.2025




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நல்ல ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்வது நல்லது.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமானவர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது. ஆனால் சிறிது சோர்வுடன் காணப்படுவீர்கள்




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.

# அறுவை சிகிச்சை பிரசவத்தின் போது இரட்டை சிசுக்களும் தாயும் உயிரிழப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் இரட்டை சிசுக்கள் அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவித்த போது உயிரிழந்த நிலையில் மயக்கமடைந்த நிலையில் இருந்த தாயும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சோமசுந்தரம் வீதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நிமலராஜ் சாருமதி (வயது 28) என்ற இளம் தாயாவார்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி கற்பவதியான தாய்க்கு வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை மூலம் இரு சிசுக்கள் பிரசவிக்கப்பட்ட போது ஒரு சிசு இறந்தும் மற்றைய சிசு சில மணி நேரத்திலும் இறந்துள்ளது.

மயக்கமடைந்த நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த தாய் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் இறப்பிற்கான காரணம் கண்டறிய உடற்கூற்று பாகங்கள் இரசாயண பகுப்பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மண்டைதீவில் மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் விழுந்த இளைஞர் உயிரிழப்பு

மண்டைதீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் விழுந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சாவற்காடு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவரத்தினம் சந்தோஸ் (வயது 17) என்பவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை சிறிய தந்தையுடன் மீன் பிடிக்க சென்று மண்டைதீவில் கடலில் விழுந்தத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

நீரில் மூழ்கி மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனையில் அறிக்கையில் பட்டுள்ளது.